# தொண்டன்

ஆவணி

1987


## வாழ்வு விடியும்!

அன்புதன்னை வளர்ப்பதாலே அமைதி எங்கும் சூழும்
துன்பமில்லா நிலையில் வையம் ஆனந்தமாய் வாழும்!
ஆசைதன்னைச் சுருக்கிக் கொண்டால் அல்லல் தானே சுருங்கும்
ஈசனருளாலே உய்யும் நிலைமை வந்து நெருங்கும்
இன்பமென்ற ஒன்றைத்தானே இதயமெல்லாம் விரும்பும்!
ஏற்றத்தாழ்வு இல்லா நேச வாழ்வில் அது அரும்பும்.
ஈட்டுகின்ற செல்வம் மாந்தர்! இறப்பிஞேடு முடியும்
நாட்டிவைத்த அறத்தின்நிழல் மறுமையிலும் படியும்!
உலகில் உண்மை நீதிநேர்மை கொண்டு வாழல் வாழ்வு
கலகம்பண்ணி உலகை ஏய்க்கும் கயவர் கட்கோ தாழ்வு!
ஊஞ்சலாடும் மனத்தர் வாழ்வு உறுதியற்று அழியும்!
சாய்ந்திடாத கொள்கை கொண்டோர் சரித்திரமோ மிளிரும்!
என்றும் வாழ்வில் அஞ்சிடாத இதயபலம் வேண்டும்!
நன்கு பேணி வளர்த்துக் கொண்டால் வாழ்வில் வெற்றி தோன்றும்!
ஏடுதூக்கி ஓய்ந்திடாது என்றும் பயிலல் ஞானம்!
கூடுமறிவு குறைந்துவிட்டால் இழிவு மிக ஈனம்!
ஐக்கியத்தைப் பேணிவாழல் மாந்தர் தமது கடமை!
சுக்குநூருய் அதையுடைத்தால் சுகங்களேது? மடமை!
ஒன்றையொன்று விழுங்கிவிட்டால் எஞ்சுவது ''பூச்சியம்''
என்றுமவை இணைந்துநின்முல் நலத்தைக்காணும் ''ராச்சியம்''
ஓடும் குருதி சிவப்பு உடலில் ஒழுகும் வியர்வை உப்பு!
நாடி ஒன்று கூடிவிட்டால் நமக்கு எவர் ஒப்பு?
ஔவியங்கள் பேசுவதால் ஆக்கமில்லை அழிவே!
செவ்வையாக ஔவை சொன்னுள் தேர்ந்தொழுகின் விடிவே!

— நிலாதமிழின்தாசன்.


கிறிஸ்தவ இலக்கியத் திங்களேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

ஆவணி — 1987
மலர்: 20 இதழ்: 6

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-

உள்ளே..

1. இதயத்திலிருந்து — 1
2. சாட்டையுடன் பேசு — 2
3. இலங்கைத் கத்தோலிக்க — 4
4. கவிஆரம் — 6
5. இளைஞர் அரங்கம் — 7
6. சாகடிக்கப்படும் சத்தி... — 10
7. இனப்பிரச்சினையும் — 12
8. செய்தி முரசு — 14
9. எதிரொலி — 16
10. சொந்தம் எப்போதும் — 17
11. திருமறையைத் தெரிந்து — 20
12. கொழும்பு 6ம் சின்னப்பர் — 22
13. இது பொது நிலையினர் — 24
14. குறுக்கெழுத்துப் போட்டி — 27

**சமயம் அனைத்தும் வாழ்க்கையைப் பற்றியது**
**சமயத்தின் வாழ்க்கை என்பது நன்மை செய்தல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறை வாக்கு

நெஞ்சிலே செருக்குற்றவர்களை சிதற அடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்.
தாழ்ந்தோரை உயர்த்தினார்.
பசித்தோரை நலன்களால் நிரப்பினார்.

லூக். 1/51-52

# இதயத்திலிருந்து....

திடீரென இடி இடித்து மழை பெய்ததுபோல் அரசியல் வானில் எதுவும் நடக்கும், அதுவும் எதிர்பாராது நடக்கும் என்பதை கடந்தசில வாரங்களாக நடைபெற்றுவந்த சம்பவங்கள் உணர்த்துகின்றன.

திடீர் தோசை, திடீர் மசாலா போல் திடீர்த் தீர்வு ஒன்று இலங்கை இனப்பிரச்சினையில் இறங்கியிருக்கிறது. இதில் ஒரு 'சட்டாம் பித்தனம்' தெரிந்தாலும் மக்களை பல்வேறு இக் கட்டுக்களிலிருந்து ஆசுவாசப்படவைத்திருக்கிறது என்னவோ உண்மைதான்.

நடுக்கடலில் தத்தளித்தவனுக்கு கட்டைத்துண்டு ஒன்று கையில் கிடைத்திருக்கிறது நிம்மதிதான். ஆனால் கரையை அடைந்துவிட்டதாக அர்த்தமல்ல.

கையில் கிடைத்தது கட்டை தானோ அல்லது கையைக் கடித்துவிடும் கடல் பிராணியோ என்ற அச்சமும் உண்டு. கடுங்காற்றும் பேரலையும் தோன்றி கட்டை வேறு கைவிட்டு விடக் கூடாதே என்ற கவலையும் உண்டு.

சந்தேகங்கள் தீரவேண்டும், அது தீர்க்கப்படவேண்டும்.

நம்பிக்கை வேண்டும், அதை நம்பும்படி நடத்திக்காட்டவும் வேண்டும்.

ஊறிப்போன இனவாதங்களைவிட்டு உத்தமர்கள் இதய சுத்தியோடு இதைச் செய்வார்களா ?

இணை ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# சாட்டையுடன் இயேசு

அருள்செல்வி றூபினா

யூதருடைய பாஸ்காத் திருவிழா நெருங்கியிருந்தகால் யேசு ஜெருசலேமுக்குச் சென்றார். கோயிலிலே ஆடு, மாடு, புறா விற்பவர்களையும், அங்கே உட்கார்ந்திருந்த நாணய மாற்றுவோரையும் கண்டார். அப்போது கயிறுகளால் சாட்டை பின்னி அவர்கள் எல்லோரையும் கோயிலிலிருந்து துரத்தினார், என்று நற்செய்தி எமக்கு எடுத்துக்கூறுகின்றது. யேசு வியாபாரிகளை ஏன் விரட்டினார் என்று ஆராய்ந்து பார்ப்போமானால், யூதர்கள் ஜெருசலேம் தேவாலயத்தில் வருடா வருடம் பாஸ்கா விழா கொண்டாடி வருவது வழக்கமாக இருந்தது. திருவிழாவுக்குத் திருவழிபாட்டில் முக்கிய இடம் பெறுவது பலிகள். ஆடு மாடு பறவைகள் பலிப்பொருட்களாக இருந்தன. எனவே ஆலயத்தில் பலிக்குரிய மிருகங்கள், பறவைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வருடமும் பணம் படைத்த ஒரு சிலர் விற்பனை செய்வதற்காக பணம் கொடுத்து ஆலயத்தைக் குத்தகைக்கு வாங்கிக்கொள்வர். குத்தகைக்கு எடுப்பவர்கள் தான் அங்கே வியாபாரம் செய்யமுடியும். இதுதான் யூதருடைய வழக்கமாக நடைமுறையில் இருந்துவந்தது. யேசுவின் காலத்தில் ஆனாஸ், கைப்பாஸ் ஆகியோர் தங்கள் உறவினரோடு சேர்ந்து இரண்டு மூன்று வருடங்களுக்குப் பெரும் தொகைப்பணத்தைக் கொடுத்து ஆலயத்தைக் குத்தகைக்கு எடுத்திருந்தார்கள். ஆதிக்கம், அதிகாரம் அவர்கள் கையில்தான் இருந்தது. பாஸ்கா விழாவிற்குப் பலிசெலுத்த வருபவர்கள் அனைவரும் ஆலயத்தில் விற்பனையாகும் மிருகங்கள், பறவைகளை வாங்கவேண்டும். ஆனால் அவைகளின் விலையோ மிகவும் ஏற்றமானது. இன்னும் ஜெருசலேமிலிருந்து மூன்றரை மைல் தூரத்தில் கெதரோன் பள்ளத்தாக்கு இருக்கிறது. இங்கே ஏழைகள் சிலர் பலிக்குரிய மிருகங்கள் பறவைகளை மலிவு விற்பனை செய்வார்கள். பலி செலுத்த வருபவர்கள் அதிகமானோர் ஏழைகள். இவர்களிடமிருந்து குறைந்த விலையில் பலிப்பொருட்களைப் பெற்று, ஆலயத்திற்குப் பலி செலுத்தச் செல்லுவார்கள் பலிப்பொருள் ஊனமற்றதாக அதாவது எதுவித குறைபாடுமில்லாததாக இருக்கவேண்டும். ஆலயத்திலே ஆனாஸ், கைப்பாஸ் என்போர் தலைமைக் குருக்களாக இருந்த காரணத்தினால், இவர்கள் கொண்டுசெல்லும் மிருகம், பறவை முதலியவற்றைப் பரிசீலனை செய்வார்கள். ஆலயத்தில் தங்களிடம் பெற்றுக்கொள்ளாத மிருகம், பறவை என்று கண்டதும் உடனே இந்த மிருகத்திற்குக் கண் தெரியாது குருடு, கால் நொண்டி முடம் என்று இப்படிப் பல குறைபாடுகளைச் சொல்லிப் பலி செலுத்தவிடாது தடைசெய்து, அதிக விலைகொடுத்து ஆலயத்தில் பலிப்பொருள் வாங்கும்படி கட்டாயப்படுத்துவார்கள். இப்படியான சந்தர்ப்பத்திலே யேசு ஆலயத்திலே நடமாடிக்கொண்டு அங்கு நிகழும் அநீதிகள், அட்டூழியங்கள் அனைத்தையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வு கொடுக்கவந்த புரட்சித் தலைவன் யேசு சும்மாயிருப்பாரா? அநீதிக்கு எதிராசக் குரல் கொடுக்கவந்தவர் அநீதியைப் பார்த்துக்கொண்டு இருப்பாரா? அவர் தனியாக ஆலயத்திலே வியாபாரிகளை விரட்டினாரா? இல்லை நிச்சயம் அவர் தனியாகச் செய்திருக்கமாட்டார். பின்னணியில் அவர் போன்ற துடிப்புள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட இளைஞர்கள் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்க, ஒரு தலைவரைப் பின்தொடர, சந்தர்ப்பத்தைச் சூழ்நிலையை எதிர்பார்த்திருந்தார்கள். எனவே யேசு சாட்டை பின்னி அடிக்க ஆயத்தமான நேரம் அவருக்குப் பக்கபலமாக அவ்வேளை தொடர்ந்து இந்த உணர்ச்சி வசப்பட்ட இளைஞர்களும் சேர்ந்து வியாபாரிகளை விரட்டினார்கள். இதனால் முன்பு ஒரு போதும் இல்லாத பெரும் குழப்பம் ஆலயத்தில் ஏற்பட்டது ஆனாஸ், கைப்பாஸ் என்பவர்களின் ஆணவத்தை ஆதிக்கத்தை, பணச் செருக்கை அடக்கி ஒடுக்கினார் யேசு, ஏற்கனவே யேசுவைத் தொலைக்க வேண்டுமென்று எதிர்பார்த்திருந்த ஆனாஸ், கைப்பாஸ், ஏரோது போன்ற இவர்களுக்கு யேசுவின் செயல் அவ்வேளை முற்றாக அழித்தொழிக்க வாய்ப்பாக அமைந்தது. யேசுவுக்கு நடந்தவற்றைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியமில்லை. அனைத்தும் யாவரும் அறிந்த உண்மை.

இருபதாம் நூற்றாண்டிலே விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து நாகரீகம் முன்னேறிக் கொண்டு வருகின்றது. மனிதன் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து சிந்தனைச் சிற்பியாக விளங்கும் இக்காலத்தில், அநீதியைக் கண்டும் கண்மூடித்தனமாக வாழுவதன் காரணம் என்ன? என்பதை ஆழ்ந்து சிந்திப்போமானால் மனிதன் மாறினாலும், மனித உள்ளங்கள், மனங்கள் மாற்றமடையவில்லை என்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஆனாஸ், கைப்பாஸ், ஏரோதுகளாக இன்றும் நாம் மனம் மாறாமல் இருக்கின்றோம் என்பதை நினைக்கும் போது வெட்கமும் துக்கமும் அடைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். நம் நாட்டிலே என்று சொல்லும்போது அரசியலை மாத்திரம் கண்ணோக்காது திருச்சபையிலே, ஒவ்வொரு ஸ்தாபனங்களிலே, துறவற சபைகளிலே எங்கும் எத்தனை! எத்தனை!! ஆனாஸ், கைப்பாஸ், ஏரோதுக்கள் வாழ்ந்துவருகிறார்கள்? அதே இடத்தில் நீதியைச் சுட்டிக்காட்டும் கிறிஸ்துக்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். திருச்சபை துறவற சபைகள் என்பவற்றைச் சுட்டிக்காட்டும் பொழுது, அங்கு இருப்பவர்கள் தெய்வப் பிறவிகள் அல்ல அவர்களும் மனிதப் பிறவிகளே என்பதை மறந்து விடக்கூடாது. மனித கண்ணோட்டத்தோடு அவர்களை நோக்கவேண்டும்.

நீதிக்குக் குரல் கொடுக்கும் கிறிஸ்துக்களுக்கு நடப்பது என்ன? ஒதுக்கப்படுகிறார்கள், விரட்டப்படுகிறார்கள், தூக்கி எறியப்படுகிறார்கள் பழிவாங்கப்படுகிறார்கள், படுகொலை செய்யப்படுகிறார்கள் கிறிஸ்துவுக்கு நடந்தது எங்களுக்கும் நடக்குமென்ற மனத்திடத்துடன் உண்மைக்கும் நீதிக்கும் குரல் கொடுக்கத் தயங்கக்கூடாது. பதவி பட்டத்துக்காக அதிகாரம் படைத்தவர்களுக்கு ஆமா, போடுபவர்களாக நாம் வாழக்கூடாது. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளங்களும் மாற வேண்டும். உண்மைக்கு என்றுமே அழிவில்லை. எனவே உண்மைக்குச் சாட்சியம் பகர்ந்த உத்தமர் யேசுவைப் பின்பற்றி உண்மைக்காக, நீதிக்காக உயிருள்ளவரை குரல் கொடுத்துப் போராட முன்வருவோம்.



அப்பா : சுகமில்லையெண்டு சொன்னாய் ஆஸ்பத்திரிக்குப் போகல்லையா?

மகன் : ஆஸ்பத்திரியில இருந்தவங்க 'செல்' விழுந்து செத்துப் போயிற்றாங்க.

- குணநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் இனப்பிளவு

# வீரகேசரியின் விமர்சனம்

5 - 7 - 1987 வீரகேசரி வாரவெளியீட்டில் 'தூண்டில்' பகுதியில் சத்தியன் எழுதியிருந்த இனப்பிளவு பற்றியகட்டுரையின் ஒரு பகுதி இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் இனப்பிரச்சினை ஏற்படுத்தியுள்ள பாதிப்பு பற்றி குறிப்பிட்டிருந்தது - கட்டுரையாளர் குறிப்பிட்டிருந்த ஒவ்வொரு அம்சங்களுடனும் எமக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் இன்று இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் நிலையை, கத்தோலிக்க மக்களிடம் குறிப்பாகத் தமிழ் கத்தோலிக்கர்களிடம் ஏற்பட்டுள்ள மனக்கொதிப்பையும், வெறுப்பையும், விரக்தியையும் துகிலுரித்துக் காட்டியிருந்தது. அதுமட்டுமல்ல கிறிஸ்துவில் ஒன்றுபட்டுள்ள கத்தோலிக்கத்தின் நிதரிசனம் எத்துணை பரிதாபமாக அரங்கேறுகிறது, விமர்சிக்கப்படுகிறது என்பதையும் கட்டுரையில் கண்டுகொள்ளலாம்.

எம். வீ.

''இலங்கைச் சமூகத்தில் கத்தோலிக்கர்கள் ஒரு சங்கடமான நிலையை அனுபவித்து வருகின்றார்கள் இலங்கையில் பௌத்த மதம் மேலாதிக்க நிலையைப் பெற்ற காலத்திலிருந்து கத்தோலிக்கர்கள் (பின்னர் வந்தவர்களான இவர்கள் அந்நிய ஆட்சியாளர்களுடன் ஒத்துப் போனவர்கள்) சிங்கள பௌத்தர்களின் பார்வையில் எப்போதும் சந்தேகத்திற்குரியவர்களாகவே விளங்கினர்.

யாழ்ப்பாணத்தில் விமான மூலம் நிவாரணப் பொருட்களைப் போட்ட இந்தியாவின் செயலுக்கு எதிரான ஆட்சேப இயக்கத்தில் இணைந்து கொள்வதன் மூலம் பௌத்தர்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் வென்றெடுக்க முடியும் என கத்தோலிக்கர்கள் எண்ணினார்கள் போலத் தோன்றுகிறது. ஆனால், இங்குகூட ஆர்ப்பாட்டம் செய்த கத்தோலிக்கர்கள் சிங்களவர்களாகவே இருந்தார்கள். ஏனெனில் இலங்கையில் உள்ள கத்தோலிக்கத் திருச்சபையும், இனரீதியாக இப்போது பிளவுபட்டுவிட்டது. தனக்குச் சேவை செய்வதில் இந்த இரு இனங்களையும் ஐக்கியப்படுத்த இயலாமல் கடவுள்கூட இருக்கிறார் போல் தோன்றுகிறது.

## தமிழ் வாணனின் நகைச்சுவை

கேள்வி: அந்தக் காலத்துத் தாய்மார்கள் பிள்ளைகளைத் தாலாட்டியதற்கும் இந்தக் காலத்து தாய்மார்கள் பிள்ளைகளைத் தாலாட்டுவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பதில்: அந்தக்காலத்துத் தாய்மார்கள் தாலாட்டிய தாலாட்டுப் பாட்டுக்களின் இனிமையைக் கேட்டதும் பிள்ளைகள் தூங்கின. இந்தக் காலத்துத் தாய்மார்கள் எங்கே தாலாட்டுப் பாடிவிடுவார்களோ என்று பயந்து அம்மா பாடுவதற்கு முந்தியே தூங்கிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதை. யாழ். ஆயர் வண. தியோகுப்பிள்ளை மிகக் கடுமையாகக் கண்டனஞ் செய்த போது தமிழ்த் தீவிரவாதிகளால் சிங்கள மக்கள் கொலை செய்யப்படுவதை கண்டிக்கத் தவறி விட்டதாக அவரைக் குற்றஞ்சாட்டி சிங்கள ஆயர்கள் உள்ளூர்ப் பத்திரிகைகளில் எழுதினார்கள். மன்னாரில் பாதர் மேரி பஸ்ரியன் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக உத்தியோக பூர்வ விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்று யாழ். ஆயரும், மன்னார் ஆயரும் கோரிக்கை விடுத்தபோது கத்தோலிக்க திருச்சபையில் உள்ள சிங்கள 'சகோதரங்கள்' அவர்களுக்கு ஆதரவு அளிக்க முன்வரவில்லை. தோலகட்டி மௌன சாலையில் சகோ. வென்சால்வாஸ் இராணுவத்தினரால் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து சிங்கள கத்தோலிக்கர்களோ அல்லது அவர்களது ஆயர்களோ ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. இலங்கையின் கத்தோலிக்க திருச்சபை ஐக்கியப்பட்ட திருச்சபையாக இல்லை. உண்மையில் அது இப்போது தமிழ்த் திருச்சபை, சிங்களத் திருச்சபை என பிரிக்கப்பட்டுவிட்டது.

எது எவ்வாறுக இருப்பினும் இந்த மதகுருமார்களிடம் (பௌத்தர்கள் - கத்தோலிக்கர்கள்) நான் ஒரு கேள்வியைக் கேட்க விருப்புகின்றேன். வெளிப்படையாகவே அரசியல் குணம்சம் கொண்ட இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு முன்னணியில் நிற்க ஏன் அவர்கள் முண்டியடிக்கிறார்கள்? தேவாலயங்களிலும் கோவில்களிலும் இருந்து ஆராதனைகளிலும், தியானங்களிலும் ஈடுபடக்கூடாதா? அரசியலை அரசியல் வாதிகளிடமே ஏன் இவர்கள் விடவில்லை?

---



# வாயாடி வண்டுமணி

'எதைப்பற்றி மனிதர்கள் அடிக்கடி பேசுகிறார்களோ' அதைப் பற்றி அவர்கள் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை.

—(பொன்மொழி)—

அடேயப்பா! இது பொன்னான மொழிதாங்க........ எனக்கு நீண்டகாலமா இருந்த குழப்பமெல்லாம் இப்பதான் தெளிஞ்சுது அட! என்னய்யா குழப்பமின்னு கேக்கிறீங்களா...

நம்ம ஜனாதிபதி மேடைக்கு மேடை பௌத்த தர்மத்தை பத்தியும், அஹிம்சையைப்பத்தியும், காந்தியைப்பத்தியும் பேசுறாரு......

நம்ம பிரதமரு சத்தியம், நீதி, தேசியம், ஒற்றுமை, சகோதரத்துவம், ஆத்ம சக்தி அப்பிடி இப்பிடின்னு வேதாந்த விசாரமெல்லாம் விளாசித் தள்ளுறாரு.

இது போதாதென்று பாதுகாப்பு அமைச்சரும் சமாதானத் தீர்வு, அரசியல் தீர்வு (ஆயுதங்களையும் வாங்கி குவித்துக் கொண்டு - படைகளையும் திரட்டிக் கொண்டுதான்) அப்படீன்னு அட்டகாசமா கத்துறாரு.

இப்பிடி நம்ம தலைவருங்க ஒண்ணாச் சேர்ந்து குரல்கொடுத்தும் இந்த விஷயங்க எல்லாம் நம்ம நாட்டை விட்டு தூரப்போய்க் கிட்டே இருக்குதேன்னு ரொம்பக் குழப்பமா இருந்ததுங்க...ம்... இந்தப் பொன்மொழியக் கேட்டப்புறந்தான விஷயமே புரிஞ்சுது நமம குழப்பமும் தெளிஞ்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கவி ஆரம்

# கண்கெட்ட பின்பு...!

— தமிழ்ச்செல்வன் மாசிலாமணி —

செல்வம் பெரிதென்றும் - பணம்
சேர்ப்பதே தொழிலென்றும்
செல்லும் இடமெல்லாம் - புகழ்
சேர்வது சிறப்பென்றும்
எல்லையில் லாநிலத்தை - வாங்கி
எனக்கென்று சேர்ப்பதற்கும்
அல்லும் பகலலைந்தேன் - ஐயோ!
ஆண்டவன் வழிமறந்தேன்!

பட்டம் பெரிதென்றும் - உயர்
பதவி நிலையென்றும்
தட்டு மனையினிலே - நித்தம்
வாழ்வது மதிப்பென்றும்!
கெட்ட குடிசூதை - நயந்து
கேடில் விழுந்தெழுந்து
பட்ட மரமானேன் - யேசு
பாதையை நான்மறந்தேன்!

பரத்தையர் உறவினிது - என்று
பாவவழி நடந்தேன்!
உறவினர் துயர்காணேன் - இருந்தும்
உதவிட பின்நின்றேன்!
அறமிலா வழிநடந்து - செல்வம்
அளவின்றி சேர்த்துவைத்தேன்!
சிறப்பில்லை இவற்றினிலே - என்று
சிந்தித்து அழுகின்றேன்யான்!

அன்பினைக் காட்டவில்லை - பிறர்க்கு
அன்பினைப் பகிரவில்லை!
பண்புடன் வாழவில்லை - சற்றும்
பாசத்தைக் காட்டவில்லை!
இன்றுநான் எண்ணுகின்றேன் - அந்த
இறைவனை வேண்டுகின்றேன்
கண்கெட்ட பின்னெதற்கு - இந்தப்
பயனில்லா நமஸ்காரங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



இளைஞர் அரங்கம்

# பூச்சியம்

— மகாத்மா காந்தி பிறந்த நாடென்றால் — அங்குள்ளவர்கள் மட்டும்தான் மகாத்மா காந்தியின் நடத்தைகளைப் பின்பற்ற வேண்டும்.

— புத்த பெருமான் பிறந்த நாடென்றால் — அங்குள்ளவர்கள் மட்டும்தான் — புத்த பெருமான் வாழ்க்கை முறைகளைப் பின்பற்றவேண்டும்.

— துட்டகைமுனு பிறந்த நாடென்பதால் — இங்குள்ளவர்கள் எல்லோரும் துட்டகைமுனுக்கள்போல் நடந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறுதான் உலகம் முழுவதும் சில குரல்கள் கோரிக்கைகள் விடுக்கின்றன. குறிப்பாக சிறீலங்கா அரசும் — தலைவர்களும் மேல்வந்தவாறு கூறிக்கூறியே தம்மையும் — சமூகத்தையும் — நாட்டையும் அழித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஏன்,

நாம் அவ்வாறு மகாத்மா காந்திகளாக வாழ்ந்து காட்டமுடியாது. எப்பொழுதும் மற்றவர்கள்தான் இவ்வாறு வாழவேண்டும் என்று கூறுவது உண்மைத் தலைவனுக்குள்ள சிறந்த பண்பு அல்ல என்பதை நிலைநிறுத்த விரும்புகின்றோம்.

- அற நெறிகளை
- சிறந்த அகிம்சை முறைகளை
- நல்ல வழிகளை

கூறிச்சென்ற மகான்கள், பெருமான்கள், அவர்கள் பிறந்த நாட்டு மக்களுக்கு மட்டும்தான் கொடுத்துவிட்டு நீங்கினர் என சில பெரியார்கள் நினைக்கின்றனர். சில பெரும் தலைவர்களால்,

- ஒரு காலத்தில்
- ஒரு சந்தர்ப்பத்தில்
- ஒரு குறிக்கப்பட்ட சமூகத்திற்கு

வழங்கப்பட்ட அணுகு முறைகளும், பாஷைகளும்

- எல்லாக் காலங்களுக்கும்
- எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும்
- எல்லாச் சமூகங்களுக்கும்

பொருந்துமா? பின்பற்றமுடியுமா என்பதும் ஆற, அமரச் சிந்தித்துப் பார்த்தலும் அவசியம். யாம் விளங்கிக்கொண்டோம் என்பதனையும் தற்கால நிறைவேற்று அதிகாரம் கொண்டோர் அனைவரும் சிந்திக்க வேண்டுமென அன்புக்குரல் கொடுப்பது,

— கலையுலகன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உதவி - ஒரு பார்வை

முழு நிறைவைக் கண்ட ஒரு மனிதன் தான் மற்றவனுக்கு உதவவேண்டும். வறிய நாடு இன்னும் ஒரு கஷ்டப்படும் நாட்டுக்கோ, பூரண வாழ்க்கைத்தரம் அடையாத ஒரு சமூகம், இன்னும் ஒரு ஏழ்மையான — துன்பப் படும் சமூகத்திற்கு உதவ முடியுமா? இவ்வாறு தான் இன்றைய நவீன சிந்தனைகள் வெளிக் கிளம்புகின்றன.

இந்தியா வறிய நாடு. அங்கு எத்தனையோ மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும்போது, முழு நிறைவை அடையாத சூழலில் சிறீ லங்கா தமிழ் மக்களுக்கு உதவ முன்வந்த விடயம் பற்றி பெரும் விமர்சனங்கள் களைப் படைந்திருக்கும் இவ்வேளையில் எமது வாழ்வுக்கு இத்தகைய எதிரொலிகள் எந்தளவுக்கு உதவும் — எம்மை தொட்டுள்ளன என நாம் எம்மை மறுபரிசீலனை செய்துபார்த்தல் வேண்டும்.

உதவி, ஒருவனின் நிறைவுக்கு பின் எழுவது அல்ல. உடனுக்குடன் ஒரு தேவை நிறைவு காணப்படவேண்டுமெனின் மேற் கொள்ளப்படவேண்டிய ஒரு சேவை — தியாகம் — பகிர்வு — அன்பு என்று கூறலாம்.

ஒரு நாடு வறியது என்று கூறுவதும், ஒரு சமூகம் வறியது என்று வரையறை செய்வதும் முடியாததொன்று. ஒரு நாட்டின் தேசிய செல்வம், மக்களிடம் சரியாகப் பரவ — பகிரப்படவில்லை என்பதே உண்மை. இந்தியாவோ — சிறீலங்காவோ பொருளாதாரத்தில் — அரசியலில் — கொள்கைகளில் வறிய நாடுகள் எனக் கூறமுடியாது. இவ்வாறுதான் ஒரு நாட்டில் உள்ள, ஒரு சமூகத்தில் அடங்கும் செல்வம் — அவ்வாறே , முடக்கப்பட்டு விடுகிறது. இதனால்தான் அநேக மக்களுக்கு உதவிகள் தேவைப்படுகின்றன.

ஒரு சமூகம் அறிவில், பொருளில் பகிர்வுகளை மேற்கொள்ளவில்லையாயின் அங்கு பல் வேறுபட்ட பிணக்குகள் எழுகின்றன.

உலக நாடுகளில் இன்று அமைந்திருக்கும் பிணச்சுகளினதும் — ஒரு நாட்டில் இனங்களுக்கிடையில் எழுந்த பிரச்சினைகளினதும் மூலாதாரங்களை ஆராய்ந்து நோக்குவோமாயின் மேல்வந்த மெய்ப்பொருள் தெளிவாகும்.

இந்நிலையில், உதவிகள் மேற்கொள்ளப் படாவிட்டால் — பிணக்கின், பிரச்சினையின் கனம் மேலும் அதிகரிக்கும் என்பதை எல்லோரும் உணருதல் வேண்டும் — ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

அதற்காக — ஒரு நாட்டில், சமூகங்களுக்கு இடையே இன்னும் — இன்னும் மேலதிக அழிவுகளை ஏற்படுத்தும் நோக்குடன் அதிகரிக்கப் படும் ஆயுத உதவிகள் — அநீதியான கொலை வழிமுறை ஆலோசனை வழங்கல்களையும் அரச, அமைப்புக்களைச் சார்ந்த தலைவர்கள் சிந்தித்து செயற்படுத்த வேண்டுமெனவும் — எமது கண்ணோட்டத்தில் வெளிப்படுத்துகிறோம்.

— தொனி —

உங்களது ஆக்கங்களை

எழுதவேண்டிய முகவரி

"இளைஞர் அரங்கம்"

திரி./மட். இளைஞர் ஆணைக்குழு

20, மத்திய வீதி,

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அப்பாவிகள்

★

இப்போதைய தாக்குதலில்
அப்பாவிகள் எவருக்கும்
ஆவி இழப்பு இல்லை -
பாய்ந்து வரும் செய்தியொன்று
கூறுகிறது
யாரடா அங்கே?
சூரியனுக்கு திரைகட்டி
வேடிக்கை காட்டுபவன்?
கண்ணிழந்த குருடனுக்கு
காலெது - கையெது
வாலெது - வாயெதென்று
வாரணம் காட்டுபவன்?
என்ன இருந்தாலும்
உங்களுக்கு
கழுகுக் கண்கள் ஐயா!
அல்லாவிட்டால்,
அலுமினியப் பறவையில்
உயரப் பறக்கும் உங்களுக்கு
எதிரிகளின் தலைமட்டும்
தப்பாது தெரியுமா?
அப்பாவியைத் தவிர்த்து
துப்பாக்கிக் காரரை மட்டும்தான்
துளைத்துச் சாய்க்க முடியுமா?
எங்களில் உங்களுக்குத்தான்
எவ்வளவு பாசம்?
எங்கள் உடலில் இரும்புச்சத்து
குறைவென்று?
இலவசமாய்த் தருகின்றீர்!
செல்வந்த நாடென்ற
படியாலேதானே
"செல் மழை" பொழிகின்றீர்!
கொஞ்சம் இறங்கி
வாருங்கள் ஐயா
இறந்தவரைப் பார்த்துவிட்டு
பட்டம் சூட்டுங்கள்
தொட்டிலும் உங்களது,
ஆட்டுவதும் நீங்கள்!
கிள்ளுப்பட்டு -
கிள்ளுப்பட்டு
மரத்துப்போன
கீரைகளோ நாங்கள்?

**மாகோ - சுரேஷ்**

## சிவனடிமையும் சீதையடிமையும்



இராவணன் ஒரு காலத்தில் சிவனுக்கு அடிமையாயிருந்தான். வீணை மீட்டி இசைபாடி சிவனையே வெல்லும் அளவுக்கு தவவலிமை கொண்டிருந்தான், அதனால் ஒரு மங்கையால் மட்டுப் அழிவானே தவிர மாவீரன் எவனாலும் சாக மாட்டான் என பெற்றவன்.

ஆனால், சிவனடிமை சீதையடிமையாக மாறினான். அவள்மீது கொண்ட மோகத்துக்கு ஆளாகி தன்மீது சாபத்தை வருவித்துக்கொண்டான். சீதை தான் அவனை அழிக்கும் மங்கையாக மாறினாள், அதற்குக் காரணம் இராவணன் சீதையடிமையானதுதான்.

சிவனடியார் என்ற பதத்தைப் படித்திருக்கிறேன் சீதையடியார் என்ற சொல்லை நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை சீதையின் இனத்தை அடிவருடி வாழ்பவர் அனைவரும் சீதையடிமைகள்தான். இவர்களுக்குப் பெயா பேடி இவர்கள் பேடியரின் அடியைத் தீண்டியவர்கள். அவர்களின் அடியிலே வீழ்ந்தவர்கள், அடி போடி எனச் சொல்லமுடியாத பேடிகள்தான் இச்சீதையடிமைகள்.

— சுவாமி சேவியர் ஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகதை

# சாகடிக்கப்படும் சத்தியங்கள்!



"பீற்றர்" ஒரு சவரத் தொழிலாளி சிறியதோர் சிகையலங்கரிப்பு நிலையத்திற்குச் சொந்தக்காரன். இருபத்துநான்கு வயதான அந்த இளைஞனின் தலையிலோ ஏராளமான சுமைகள்.

தள்ளாடும் வயதான தாய் தந்தை. உழைத்து உதவக் கூடிய வயதிலே "காணுமல்" போன தம்பி; "மின்கம்பத்தில்" கணவனைப் பறிகொடுத்து இரண்டு பிள்ளைகளுடன், விதவையாய் வீட்டோடு வந்திருக்கும் தமக்கை, இவற்றை விட திருமணத்தை எதிர்பார்த்து இருக்கும் இரண்டு சகோதரிகள்......!

இத்தனை பேர்க்கும்; இவ்வொருவனே அத்தனை தேவைகளையும் நிறைவேற்ற வேண்டியவனுய் இருக்கின்றுன். ஊரில் கொஞ்சக் காலமாய் இரவுகள் விடிந்து மனித நடமாட்டத்தைக் காணும் வரை ஒரே கலக்கம் தான். அன்று மாலை பீற்றர் தனது அன்றைய வருவாயான இருபது ரூபாயுடன் வீடு திரும்பினன் "அம்மா! இந்தாங்க இன்றைக்கு இவ்வளவு தான்! எல்லோரும் அகதிகளாகவும் அனாதைகளாகவும் அலையும் போது! ஆர் தான் முடிவெட்டி சவரம் பண்ண வாருன்? வரவர தொழிலிலேயே நம்பிக்கையில்லாமல் போகுது" சலிப்போடு கூறிக் கொள்கின்றுன்.

தாயார் மகன் கொடுத்ததை வாங்கிக் கொண்டு இரவுச் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களைப் பெறுவதற்காக கடைக்கு விரைகின்றுள்.

குளித்து விட்டு வந்த பீற்றர் தங்கை கொடுத்த தேனீரைக் குடித்துவிட்டு, தமக்கையின் பிள்ளைகளுடன் குலாவிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்திலும் இரண்டு 'ஹெலிக்கோப்டர்கள்' பயங்கர இரைச்சலுடன் பறந்து போகின்றதைப் பார்த்ததும் நெஞ்சுக்குள் ஏதோ குடைகின்றது அவனுக்கு.

தமக்கை சொன்னுள் "தம்பி! இதோட அஞ்சாறு தரம் 'ஹெலி' வந்து போயிற்று! சில நேரம் நாளைக்கு "ரவுண்டப்" செய்தாலும் செய்வாங்க போல கிடக்கு! நீ நேரத்தோட சாப்பிட்டிட்டு எங்கை யெண்டாலும் பாதுகாப்பான இடத்திற்கு போ தம்பி"

இறுதிப் பற்றுக் கோடும் பறிபோகக் கூடாதே! என்ற கலக்கம் அவளுக்கு.

மறுநாள் விடியல் எதிர் பார்த்தது போலவே! வேட்டொலிகளோடு தான் விடிந்தது. எங்கும் பயம், பதற்றம் தடுமாற்றம், நடுக்கம், ஒரே அல்லோல கல்லோலந்தான். படையினர் ஊரைச் சூழ்ந்து கொண்டனர். பல அப்பாவிகளின் உயிர்கள் பறிக்கப்பட்டு! உடல்கள் ஆங்காங்கே எரிக்கப்படுகின்றன.

நவீன ஏரோதுக்களின் ஏவலாட்கள் ஆடும் மிலேச்சத்தனமான வெறியாட்டம். சர்வதேச வீடமைப்பு ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட வேளையிலேயே! இங்கு வீடு டைப்பு வீடெரிப்பு......!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பீற்றர், எங்கும் பாதுகாப்பான இடம் தேடிப் போகவில்லை. தேவனில் நம்பிக்கையுள்ள அந்த இளைஞன் தன்னை, தனது ஆத்மாவை அவனிடமே ஒப்புவித்து, வருவதற்கெல்லாம் நீரே பொறுப்பு என வீட்டிலேயே இருந்தான். திறந்த வீட்டிற்குள் நாய்கள் புகுந்தன போல்! திறவாத "படலையை" திறந்து கொண்டு "ஏ. கே." யை ஏந்திய சில காக்கிகள் நுழைந்தன. "எல்லாரும் வெளியில வாருங்கள்" என்று வந்தவர்களில் ஒருவன் உத்தர விட்டான். தாய், தந்தை, சகோதரிகள் சகிதம் பீற்றர் வெளியே வந்தான். "ஆ! கொட்டியா!" என்று பீற்றரைக் குறிப்பிட்டு வாயைப் பிளந்தான் ஒருவன்.

இந்த நாடு ரணகளமாவதற்கு! எம் எல்லோரையும் "அவர்கள்" அப்படி குறிப்பிடவும் வர்ணிக்கவும் முற்பட்டதும் ஒரு காரணம்.

உளவியல் ரீதியாகக் கூட நல்ல உள்ளம் கொண்ட ஒருவனையும் திருடன், திருடன் என அவன் காது கேட்க நாளாந்தம் "அர்ச்சித்து" வந்தால் அவன் திருடனாகவே மாற வாய்ப்புண்டு அல்லவா?

பெற்றோர் சகோதரிகள் எவ்வளவோ அழுதுபிரலாபித்தும், அவர்கள் கேட்காது பீற்றரை "பெரியவரிடம்" அழைத்துப் போய் விடுவிப்பதாக, கூறி கொண்டு போய் விட்டனர். கொடிய பருந்திடம் குஞ்சைப் பறிகொடுத்த தாய்க் கோழியின் பதற்றம் கலந்த பரிதாபநிலையில் கண் கலங்கி நின்றனர். பீற்றரைப் பெற்றவர்களும் அவனுடன் பிறந்தோரும். பீற்றரின் தமக்கையின் சின்ன மகன் கூட!" மாமா அவங்களோட போக வேணும் மாமா! வாங்க மாமா! என்று அழுகுரலில் கூறினான்.

அன்று மாலையோடு அவர்களின் தேடுதல் வேட்டை ஒருவாறு ஓய்ந்தது. நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவிகள் பயங்கரவாத சந்தேக நபர்களாக அவர்களின் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு "முகமூடி யூதாசுகளின்" தலையாட்டல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

---

—நிலா தமிழின் தாசன்—
நிலாவெளி - 3.

---

பீற்றரும் பலிப்பீடத்திற்குத் தெரிவான வெள்ளாடுகளில் ஒருவன்.

அன்றிரவே! விசாரணை ஆரம்பமானது! பலர் செய்யாததை! காணாததைக் கூட! வதைதாங்க முடியாமல் "ஓம் மாத்தயா" என்று ஒத்துக் கொள்கின்றனர். இன்னும் சிலர் "எனக்குத் தெரியாதையா! அது அவனுக்குத் தான் தெரியும்" என்று அடுத்தவனை மாட்டி விட்டு தாங்கள் சழன்று கொள்கின்றனர். பீற்றர் "மஸ்கடையில்" தலை கீழாகத் தொங்குகின்றான். மண் நிரப்பப்பட்ட "எஸ் லோன் பைப்" சலாகை, தடி, இரும்புக்கம்பி, என அவன் மெலிந்த இளம் மேனியில் விளையாடுகின்றன.

ஆனால்! அவன் வாயிலிருந்து "இல்லை, தெரியாது என்ற வார்த்தைகளே வருகின்றன. நகக் கண்களில் குண்டூசிகள் ஏற்றப்படுகின்றன, நிர்வாண உடலில் சிகரெட்டின் "சிவந்த" முனைகள் கோலம் போடுகின்றன! கண்களுக்குள் மிளகாய்த்தூள் தூவப்படுகின்றன! இன்னும் எத்தனையோ கிரியைகள் சாத்தானின் ஊழியர்களால் நிறைவேற்றப்படுகின்றன.

பீற்றரின் வாயிலிருந்து அதே வார்த்தைகள் தான், "இல்லை! தெரியாது!"

அவனது இதயத் துடிப்பு ஓயும் வரை அந்த சாத்தானின் ஊழியர்கள் ஓயவேயில்லை. சத்தியத்திற்காக உயிர்விட்ட இயேசு சிலுவையில் தொங்கியபடியே மும்முறை என்பிதாவே! என் பிதாவே! என கூறி உயிர் நீத்ததை எண்ணினானோ என்னவோ! 'பீற்றர்' தீராந்தியில் கட்டப்பட்ட 'கப்பியில்' தலை கீழாகத் தொங்கியபடியே! யேசுவே! யேசுவே! என மும்முறை கூறியபடியே அவன் 'அது' வானான்.

மறுநாள் வானொலியில் "நவீன ஆயுதங்களுடன் நிலாவெளியிலுள்ள அடர்ந்த காட்டினுள் கைது செய்யப்பட்ட பீற்றர் என்ற பயங்கரவாதி தப்பியோட முயற்சிக்கையில் "பாதுகாப்பு படையினரால்! சுட்டுக் கொல்லப்பட்டான்" என ஒலித்தது.

பீற்றரின் வீட்டில் அழுகையொலி கவச வாகனங்களின் இரைச்சலாய் பீறிட்டெழுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இனப்பிரச்சினையும்
# இலங்கை திருச்சபை தலைவர்களும்



ஒரு காலத்தில் சுவர்க்கமென்றழைக்கப்பட்ட ஈழமணித்திருநாடு இன்று இனப்பிரச்சினை என்னும் கொடிய சாக்கடையில் வீழ்ந்து, வெளியேற முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. தினமும் மக்கள் மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். விசேடமாக வட, கிழக்கு மக்கள் வீடுகளையும், உடமைகளையும், உற்றார் உறவினர்களையும் இழந்து, சொந்த மண்ணிலேயே நிர்க்கதியற்று அகதிகளாய் அலையும் சோக காவியங்கள் தினம் நடந்துகொண்டேயிருக்கின்றன. மக்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள், மாக்களாய் மாறி,ஏறிமிதிக்கும் கொடூரம் தொடர்கதையாய் தொடர்கின்றது.

இச்சூழ்நிலைகளில் மக்களை வழிநடத்த வேண்டிய அல்லது மக்களுக்காக குரல்கொடுக்க வேண்டிய எம் திருச்சபைத் தலைவர்களின் ஒருபக்கச் சார்பான நடவடிக்கைகள் வெந்த புண்ணில் வேல்பாச்சுவதாய் அமைகின்றதையும் சுட்டிக் காட்டல் அவசியமாகின்றது. மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் வான் வெளித் தாக்குதல் இடம்பெறுவதைப் பற்றியோ, கடல், தரை வழி நவீனஆயுதங்களின்பிரயோகம் பற்றியோ கடுகளவும் சிந்திக்காமல், இரத்த வெறிபிடித்த அரக்கர்களின் கைப்பொம்மைகளாய் செயற்படும் இன்றைய தென்னிலங்கைத் திருச்சபைத் தலைவர்களின் போக்கு ஈழத் தமிழ் மக்களின் உள்ளங்களைத் தாக்கி ஆறுப்புண்ணை ஆக்கிவிட்டதென்றே கூறலாம். ஒரு இனம் சொந்த நாட்டிலேயே, அரசியல், சமூக, பொருளாதார காரணிகளால் நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு சகல உரிமைகளையும் இழந்து அடிமைகளாய் வாழும் நிலைகண்டும் மனம் இளகாத இக்கலைவர்கள்தான் அன்று கிறிஸ்து கூறிய வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்.

மனிதனின் உயரிய மாண்புகள் வெறும் கானல் நீராகிவிட்ட வேளையில் திருச்சபையின்பால் நாம் கண்களைத் திருப்பி கரங்களை உயர்த்தி இரந்து கேட்பது வெறும் ஆன்மீக உரைகளையும், வழிபாடுகளையும் குறுகிய கால பொருளாதார உதவிகளை மாத்திரமல்ல. மாறாக நசரேத்தூர் இயேசு வாங்கிய முழு விடுதலை வாழ்வினையே கேட்கின்றோம். மனிதனுக்கு முழு விடுதலை அளிப்பதையே நற்செய்தியாய் கண்டவர் இயேசு கிறிஸ்து. அன்றைய சமூகப் பொருளாதார அரசியல் சூழ்நிலைகளை அறிந்தவராய் மக்களோடு மக்களாய் விடுதலைப் பணியில் ஈடுபட்டு தன்னுயிரை அர்ப்பணித்து ஒரு விடுதலைப் பாதையினை மக்களுக்குக் காட்டிச் சென்றவர் அவர். அன்றும், இன்றுபோல் அடக்குமுறையும், அடிமைத்தனமும் தலைவிரித்தாடியது. வெறுமனே அவற்றைப் பார்த்துக்கொண்டிராமல் குரல் கொடுத்துப் போராடியவர். ஆனால் இன்று அவரின் வழித்தோன்றல்கள் என்று பெயர் தாங்கி வாழும் நம் இலங்கைத் திருச்சபைத் தலைவர்கள் தாழ்த்தப்பட்டோர்க்காய் குரல்கொடுக்கத் திராணியற்று இனத்துவேசக் குட்டையிலே மூழ்கி கிறிஸ்துவின் மாண்டக்கும தூய்மைக்கும் களங்கம் கற்பிக்கின்றனர்.

இனப்படுகொலைகள் தொடரும்போது நமக்கேன் வம்பு என்று வெறும் பார்வையாளர்களாய் இருந்துவிட்டு, எவரோ உணவுப்பொருட்களை விமானத்தில் இருந்து போட்டுவிட்டார்கள் என்றதும் கொடிபிடித்து அணிவகுத்துக் கண்டன ஊர்வலம் நடத்தும் இவர்களின் பச்சைத்தனமான இனத்துவேசத்தை தமிழ்பேசும் கத்தோலிக்க மக்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். குன்றின்மேல் துலங்கும் கலங்கரை விளக்காய் திகழவேண்டிய இவர்களே தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள இயலவில்லையென்றால் பாமர சிங்கள மக்கள் எங்ஙனம் புரிந்து கொள்வார்கள்? உள்ளத்தினுள்ளே பகையுணர்வும், அகந்தையும் நிலைகொண்டுள்ள நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இராப்பகலாய் சமாதானத்திற்குக் கூக்குரலிட்டு செபித்தாலும் அது நிட்சயம் இலங்கை மண்ணை நெருங்காது. அண்மைக்காலச் சம்பவங்களை எடுத்து நோக்கின் எம் தலைவர்களின் மனநிலை தெளிவாய் பிரதிபலிப்பதை உணரலாம். சிந்தனை, சொல், செயல் அனைத்துமே அவர்கள் சார்ந்துள்ள இனத்திற்கு சாதகமாய் இருப்பதை அவதானிக்கலாம் இந்த நிலையில் அவர்கள் எங்ஙனம் மக்களை இறையரசின் பாதையில் வழிநடத்த முடியும்?

அடுத்ததாக எம் தமிழ் பிரதேசங்களில் உள்ள உள்ளூர் திருச்சபைத் தலைவர்களும் இந்நடவடிக்கை பற்றி பகிரங்கமாக கருத்து வெளியிடுவது மிக அரிது. தம் கண் முன்னால் படுகொலைகள் நடந்தும், எத்தனையோ இளைஞர்கள் சித்திரவதைப்படுவதை அறிந்தும் எவ்வித உணர்ச்சிகளையும் பகிரங்கமாய் வெளிக்காட்டியதாகத் தெரியவில்லை.

எமது மறைமாநிலத்தில் போதிய அளவு துறவற தலைவர்கள் இருந்தும் மிகச்சிலரே மக்களுக்காக தினமும் குரல் கொடுக்கிறவர்களாய், செயல்படுகின்றவர்களாய் இருக்கின்றனர். இன்று எம் மக்கள் சிறந்த தலைவர்களை இழந்து நிற்கதியாய் இருக்கும் இவ்வேளையில் நம் திருச்சபைத் தலைவர்கள்தான் அவர்களை வழிநடத்த வேண்டும். அத்தோடு அம் மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் அரசியல் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும். மக்களோடு மக்களாய் நின்று அவர்களின் துன்பங்களில் பங்கெடுத்து சாத்வீக வழிகளில் தம் உரிமைகளுக்காக தாங்களே போராடும் ஓர் விழிப்புணர்வை ஊட்டவேண்டியது திருச்சபைத்தலைவர்களின் முக்கிய கடமை என்றே கூறலாம். இவ்வாறான செயல்பாடு எம் உலகத்தின் பரந்த திருச்சபைக்குப் புதுமையானதல்ல அண்மையில் பிலிப்பீன்ஸ் நாட்டில் மக்கள் ஆட்சி ஏற்படக் காரணமாக இருந்தவர்கள் எமது றோமன் கத்தோலிக்க திருச்சபையினர். அவர்கள் மேற்கொண்டது அரசியல் நடவடிக்கையல்ல. மாறாக அது ஒரு மீட்புப்பணி. இதே போன்று அங்கிலிக்கன் திருச்சபையினர் தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கெதிராகவும், அடக்குமுறைக்கெதிராகவும்



கறுப்பின மக்களோடு சேர்ந்து போரடுகின்றனர். அவர்கள் தம் நடவடிக்கைகள் அரசியல் சாயம் பூசப்படுவதையிட்டுக் கலங்கவில்லை. ஒதுங்கவில்லை.

இதேபோன்று எமது உள்ளூர் திருச்சபை தலைவர்களும் அநீதிக்கெதிராய் குரல் கொடுக்கவேண்டும் என்பதே எம் விருப்பு. இன்றைய சூழ்நிலையில் வெறுமனே ஆன்மீகக் காரியங்களில் ஈடுபடுவது, மதம் என்பது ஓர் மாயை என்ற சித்தாந்தத்திற்கே மக்களை இட்டுச்செல்லும். ஏனெனில் இன்று எமக்குத் தேவைப்படுவது அரசியல் சார்ந்த விடுதலையே. அதைப் பெற்றெடுக்க எமது திருச்சபை வழிசமைக்குமாயின் அது மக்களுக்காற்றப்பட்ட தூய பணியாக அமையும். மாறாக மக்கள் அழியும் நிலையில் மௌனம் சாதிப்

செ. அ. இராஜன்
இருதயபுரம்,
மட்டக்களப்பு.

பதும் ஒதுங்கி நிற்பதும் கிறிஸ்துவின் பணியாக அமையாது.

மேலும் ஆலயங்களிலும் செபக்கூடங்களிலும், மக்களின் மனநிலைக்கேற்ப செப, தப ஆராதனைகள் இடம் பெறுதல் நலம். துன்ப துயரங்களால் மனச்சோர்வுற்ற அம் மக்களுக்கு இந்நடவடிக்கைகள் உள ஊக்கத்தை, ஆன்மீக உறுதியை அளிப்பதாக அமையும். இன்றைய சூழ்நிலையில் சில ஆலயங்களில் திருப்பலி பூசை வேளையில் இடம்பெறும் பிரசங்கங்கள், மறையுரைகள் நடைமுறைச் சூழலோடு ஒட்டாததாகவும், வேதாகமத்தின் ஆழ்ந்த கருத்தோடு தொடர்பற்றதாகவும் காணப்படுகின்றன. மக்கள் திருப்பலிக்கு வரும்போது பல்வேறுபட்ட மனநிலை கொண்டவர்களாக வருகின்றனர். அவர்கள் அனைவரும் திருப்பலியில் பங்குகொள்ளும் வகையில் அல்லது உள்ளிழுக்கும் வகையில் ஆராதனைகள் இடம்பெறுதல் நலம் சிறப்பாக மக்கள் உள ஊக்கம் பெறும் வகையில் வழிசமைக்கப்பட்டால் அடித்தள அறிவற்ற மக்களும் அதி உன்னத ஆராதனைகளில் பங்கேற்க வழி பிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தி முரசு

## கிழக்குப் பல்கலைக்கழக கிறிஸ்தவ ஒன்றியம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ ஒன்றியமானது மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் ஆகியவர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு திரி./மட். ஆயர் பேரருட் திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் ஆலோசனையுடன் அண்மையில் உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாவலர் – பேராசிரியர் K. D. அருட் பிரகாசம். மேலதிக செயலாளர் - R. B. ராஜேஸ்வரன். தலைவர் - J C. C பெலிசியன். செயலாளர் - A. B. பெலிசியா. கணக்காய்வாளர் - M. A. பத்மகுமார். பல்கலைக்கழக பரிபாலகர் - வண. பிதா சாந்தன் இம்மானுவல் (பங்குத்தந்தை, செங்கலடி).

கிறிஸ்தவ நல்வாழ்விற்கும், இப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கும் இவ்வொன்றியம் தனது முழுப்பங்கினையும் செலுத்தும்.

## புதிய இயக்குனர் நாயகம்

புனித வளனுர் சபையின் 16வது பொதுச் சபைக் கூட்டம் ஜூன் 23ல் மறைமாவட்டப் பேராளர் வணபிதா அன்ரன் மல்லவராச்சியின் அனுசரணையுடன் கூடியது, இச்சபையின் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகுமுன்னர் ஆயரவர்கள் உரையாற்றும்போது எல்லோரும் கடவுளின் வாக்கியங்களைப் பேச முனையுமுன் தாம் கிறிஸ்தவர்கள் என்பதை மனதில் பதிக்கவேண்டும் என்ருர். இதனுல்தான் இச்சபை பெருமை பெறமுடியும். எமது தேவாலயங்களும் அதன் கோட்பாடுகளும் எங்கும் எமது முடிவிலேயே பிரதிபலிக்க வேண்டும். கிறிஸ்துவின் இராச்சியத்தின் பகிமையை தேவாலயங்கள் புனித ஆவியின் துணையுடன் பெருமைப்படுத்த வேண்டும் என்று மேலும் கூறினுர்.

இச்சபையின் 16வது இயக்குநர் நாயகமாக வண சகோதரர் தோமஸ் தெரிவுசெய்யப்பட்டார். வண. சகோதரர் ஏ. சூசைதாசன், ஜேம்ஸ் பீரிஸ், ஜே. மார்ட்டின், வீ. இராசநாயகம், கணக்காளர் நாயகம் வின்சென்ற் பெர்ஞன்டோ ஆகியோர் ஏனைய உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

## ஆண்டு விழா

கல்முனை திரு இருதய ஆலய அருகாமையில் அமைந்திருக்கும் யோசப்வாஸ் தையல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியினை கடந்த 14-6-87 ஞாயிறன்று நிலையத்தினரால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதன் பிரதம விருந்தினராக திரி./மட். ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சிக்கு சுமார் 50க்கும் மேற்பட்ட சகோதரிகள் (யுவதிகள்) பங்குபற்றினர்.

## ஆலயத் திருநாள்

கல்முனை திரு இருதய ஆலயத் திருநாளை பங்குமக்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடினர். திருநாள் திருப்பலியினை ஆயர் அவர்கள் நிறைவேற்றினுர். சிறப்பம்சமாக இரு திருவருட் சாதனங்கள் வழங்கப்பட்டது. சிறுவர்களுக்கு திவ்விய நற்கருணையும், வளர்ந்தோருக்கு உறுதிப்பூசுதலும் வழங்கப்பட்டது.

தகவல்:

செல்வி T. பத்மா

## பயிற்சி வகுப்புகள்

செங்கலடி புனித நீக்கிலாஸ் தேவாலய பங்கில் ஏழு ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் புனித வின்சன்ட் டி பவுல் சபையினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமது பகுதியிலுள்ள இளம் பெண்களின் நன்மை கருகி முதல் கட்டமாக சுமார் 30 மாணவியருடன் பயிற்சி வகுப்பொன்றினை ஆரம்பித்துள்ளனர். இம் மாணவியருக்கு தையல், மனையியல், சுகாதாரம், கோழி வளர்ப்பு போன்றவற்றில் பயிற்சிகளும், ஆலோசனை வகுப்புக்களையும் ஒழுங்குசெய்து நடாத்தி வருகின்றனர் அத்துடன் க பொ. த (சாதாரண) தர மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் வகுப்புக்களை யும் மேலும் ஆங்கிலம், தட்டச்சு வகுப்புகளை யும் ஆரம்பிக்க எண்ணியுள்ளனர்.

தகவல்:

**ஜே. எச். இரத்தினராஜா**

செயலாளர்,

புனித வின்சன்ட் டி பவுல் சபை.

## ஆலயத் திருவிழா

மட்டக்களப்பு டச்பார் - கல்லடி புனித இஞ்ஞாசியார் ஆலயத் திருவிழா ஆவணி மாதம் 2ம் திகதி நடைபெற்றது.

பங்குத்தந்தை வணபிதா அன்ரனிப்பிள்ளை யுடன் வணபிதா போல் சற்குணநாயகம் தலைமையில் கூட்டுத் திருப்பலிப் பூசை காலை 7-30 மணிக்கு நடைபெற்றது.

தகவல்:

**மாவின் ருகல்**

விழாக்குழுவின் சார்பில்.

எதைப்பற்றி மனிதர்கள் அடிக்கடி பேசுகிறார்களோ, அதைப்பற்றி அவர்கள் அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை.

☀

ஓஹோ! எமது நாட்டில் நீதி, சமாதானம், அஹிம்சை, தர்மம் எல்லாம் அருகிவிட்ட காரணம் நன்ருகப் புரிகிறது.

# திருமலைச் செய்திகள்

புனித மரியாள் பேராலயத்தில் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேவநற்கருணை எழுந்தேற்றம் ஆலய வளவினுள் மிகவும் அமைதியான முறையில் அருட்தந்தை நோபட் ஒக்கூஸ் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது.

கல்வாரி முன்றலில் முதல் நற்கருணை ஆசீர்வாதம் அருட்தந்தை திருச்செல்வம் O.M.I. அடிகளாரால் வழங்கப்பட்டது. வம்பேக் அரங்கில் இரண்டாவது ஆசீர்வாதம் அருட்தந்தை கிறிஸ்டி கனகநாயகம் அடிகளாரால் வழங்கப்பட்டது. ஆலயத்தினுள் மூன்ருவது நற்கருணை ஆசீர்வாதம் அருட்தந்தை றேமன் அரசரெட்ணம் அடிகளாராலும் வழங்கப்பட்டது.

இவர்களுடன் அருட்சகோதரர் சுரேஷ் போல் அவர்களும், அருட்சகோதரர் டயஸ் S. S. J. அவர்களும் கலந்துகொண்டனர்.

## பயிற்சிப் பாசறை

புனித மரியாள் கல்லூரியில் மாணவிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பாசறை ஒன்று 26ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 29ம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெற்றது. இப்பயிற்சிப் பாசறைக்கு புனித மரியாள் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் ஆங்கில பாடசாலை, ஸ்ரீ சண்முக வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்தும் ஏறக்குறைய 60 மாணவிகள் கலந்துகொண்டனர்.

இதனை திரி./மட். இளைஞர் ஆணைக்குழு அருட்தந்தை போல் சற்குணநாயகம் தலைமையில் திருகோணமலை வந்து நடாத்தியது. மேலும் இப்பயிற்சிப் பாசறை நடத்த திருகோணமலை புனித மரியாள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி தெரேஸ்ராணி அவர்கள் ஊக்குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பாசறையை சிறப்பிக்குமுகமாக திருகோணமலை கல்வியதிகாரியுடன் மற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் கலந்துகொண்டனர்.

தகவல்:

**ஜெறல்பீன் இம்மானுவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுவைக்கச் சில துளிகள்

## பெண்ணுரிமை

ஆணுடலின் விலா எலும்பை
ஒடித்தெடுத்து ஆண்டவன்
ஊனுடலைப் பெண்ணுக்கு
உவந்தளித்தான் என்பார்கள்
அன்று பறிகொடுத்த
ஆத்திரத்தில் ஆடவர்கள்
இன்று பெண்ணினத்தின்
இடுப்பையே ஒடிக்கின்றார்.

- கவிஞர் மீரா

## உப்புப் பணம்

SALARY என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'சம்பளம்' என்று தமிழில் பொருள். இந்த SALARY என்ற வார்த்தை எப்படி வந்தது தெரியுமா? ரோம் நாட்டு வீரர்களுக்கு சம்பளத்தின் ஒருபகுதி உப்பாகக் கொடுக்கப்பட்டு வந்தது. இதற்கு உப்புப்பணம் என்று பெயர். இதனைக்குறிக்கும் ரோமன் வார்த்தை 'சாலரியம்' (SALARIUM) என்பதாகும் இதிலிருந்தே சம்பளத்தைக் குறிக்கும் SALARY என்ற ஆங்கிலச் சொல் வந்தது

## மனித சக்தி பற்றி
### - மார்கஸிம் கார்க்கி

''வாழ்க்கை வசீகரமானது என்பது உண்மையல்ல. அதில் அழுகையும், துயரமும் தவிர வேறொன்றும் இல்லை என்பதும் உண்மையல்ல. மனிதன் அதில் எதை எல்லாம் தேடிக் கண்டு பிடிக்க விரும்புகின்றானோ அவைகளெல்லாம் வாழ்க்கையில் உள்ளன. வாழ்க்கையில் எது இல்லையோ, எது குறைவாக உள்ளதோ அதனை உருவாக்கிக் கொள்ளும் சக்தி மனிதனிடம் உண்டு''

## உண்மைச் சம்பவம்

ஒரு பங்கின் பாதுகாவலர் திருவிழா. பங்குப் பேரவைக் கூட்டம். தலைவர் பேசுகிறார். பத்து நாள் திருவிழா. உங்க அபிப்பிராயங்களைச் சொல்லுங்க ''பத்து நாளில கடைசி நாளவிட்டு மீது ஒன்பது நாளிலேயும் நாலு சினிமாவும், அஞ்சு நாடக்ங்களும் வைக்கணும். தினசரி வேறவேற சாமியாருங்கள பிரசங்கத்துக்கு கூட்டிகிட்டு வரணும். 9ம், 10ம் திருநாட்களில் மியூசிக் பார்ட்டி வைத்து பூசை பாடணும் இன்னும்... இன்னும்... இறுதியாக பங்குச்சாமியார் சொன்னார்: 'ஒரு சின்ன சஜஷன். நாலு சினிமா போடறத ஒண்ணு குறைச்சிடுவோமே! பங்குப் பேரவை அன்பர்களுள் சிலர் ஆவேசப்பட்டு 'ஓய்! நீர் இந்தப் பங்கில் இருக்கணுமா? இல்ல நாளைக்கே பெட்டி கட்டணுமா? பங்குச்சாமியார் மௌனம்.

— இது தமிழ் நாட்டில் நடந்தது.

## சுதந்திரம்

காலுக்கு

செருப்புத்தான்

கேட்டோம்

லாடமடித்து

விட்டார்கள்.

— இராகுல
கிருஷ்ணகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## அத்தியாயம் 19

"நாடு செழிக்க ஒரு பாட்டு
நல்லோர் வாழ ஒரு பாட்டு
கேடு தொலைய ஒரு பாட்டு
குயிலேபாடு பல பாட்டு"

- மட்டுநகர் முத்தழகு

ஆனந்தன் ஆஸ்பத்திரிக் கட்டிலில் ஒரு மாதம் வரை இருந்துபார்த்தான். கொஞ்சங்கூடச் சுகம் வரவில்லை ஒரு கையையும், காலையும் அவனுக்கு இழுத்துவிட்டது. ஜெயந்தி வயிற்றுச் சுமையோடு ஆசுபத்திரிக்கும், வீட்டிற்கும் காலை மாலையென்று ஓடியோடிக் களைத்துப்போனுள்.

ஆசுபத்திரி கைவிட்ட நிலையில் அவனை வீட்டிற்குக் கொண்டுவந்து எவ்வளவோ வைத்தியங்களைச் செய்து பார்த்தார்கள் ஊகூம் சரிவரவேயில்லை.

சின்னவனும், ஆனந்தனின் தம்பி ராமுவும் கூட்டாகச் சேர்ந்து தொழிலை நடத்தினுர்கள் தொழிலுக்குப் போகாத நேரங்களில் ஆனந்தனுக்குப் பக்கத்திலேயே கிடந்து விடிந்தார்கள்.

இரத்த உறவுள்ள சித்திராவும், ராணியும் ஏனோ தானேவென்று வந்துபோக ஜெயந்தி பெற்ற தாயைப்போல ஆனந்தனை தன் குழந்தையாகப் பார்த்துப் பராமரித்தபோது பந்த — பாச உறவுகள் தொடர்கதையாக நீள்வதை ஆனந்தன் அவதானித்தான். அவனுடைய பெண் சகோதரிகள் எல்லோரும் பெரிய குடும்பப் பொறுப்புக்களைத் தாங்கி தங்கள்தங்கள் கணவன்மார்களையும், பிள்ளைகளையும் கவனிப்பதில் நேரத்தைச் செலவிடுவதனுல் தன்னைவந்து கவனிக்கவில்லையே என்று அவனுல் குறைபட்டுக்கொள்ள முடியவில்லை.

இந்த வேளையில்தான் ஆனந்தன் தாய் பாக்கியத்தை எண்ணிப்பார்த்தான். 'அம்மா இருந்திருந்தால் எவ்வளவுஉதவியாகஇருந்திருக்கும்!ஜெயந்தி வயிற்றுப் பாரத்தோடு இரவுபகலென்று பாராமல் எனக்காக இப்படிக் கிடந்து உழல்வதைப் பார்த்து அம்மா சும்மாவே இருந்திருக்கமாட்டாள். ம்... ஜெயந்திதான் பாவம்' தன்னுடைய ஆசாபாசங்களையெல்லாம் தூக்கி ஒரு மூலையில் போட்டுவிட்டு என்னுடைய வாழ்வுதான் தன் வாழ்வு! என்று வாழும் ஜெயந்தியை நான் மனைவியாக அடைய முற்பிறப்பில் என்ன தவத்தைச் செய்தேனே தெரியாது!' என்று எண்ணிப் பார்த்தபோது ஆனந்தனின் மனவேதனைகள் ஓரளவு குறைந்து லேசாக இருந்தன.

அதேவேளை ஜெயந்தியின் தாயார் அவர்கள் வாழ்வோடு ஒட்டாமல் தள்ளி நின்றதும் அவனுக்கு புதினமாகவே இருந்தது. எல்லாத் தீபங்களும் கோவில் தீபங்களாகிவிடமுடியுமா என்ன?

ராமு, பட்டப்படிப்புச் சான்றிதழை அறிவு முதிர்ச்சியின் அத்தாட்சியாக அடிப்பெட்டியினுள் போட்டுவிட்டு ஆனந்தனின் வாரிசாக தொழிலில் முன்னேற முயற்சித்தான்.

ஊசிபோல் மெலிந்திருந்த சின்னவன் கலியாணம் செய்தபிறகு பலூனுட்டம் ஊதிப்போய்விட்டான். அவனுக்கிருந்த பலவீனங்களெல்லாம் ஓடிஒளிந்து கொண்டன. ஆனந்தனேடு ஒன்ருகக் கூடிப்பழகிய அனுபவங்கள் அவனை ஆனந்தனின் இடத்திற்கு கொண்டுவந்திருந்தது. மிகவும் நன்றியுணர்வோடு சின்னவன், ஆனந்தன் விட்ட பணியை ராமுவோடு சேர்ந்து தொடர்வதை அவதானித்த ஆனந்தன் அவனைக் கட்டித்தழுவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கண்ணீர்விட்ட காட்சி இராமன் குகனைக் கட்டித்தழுவியதை ஜெயந்திக்கு நினைவு படுத்தியது.

காலங்கள் தொடர்கதையாக நீண்டுகொண்டே சென்றன.

ராமு கெட்டித்தனமாக உழைத்து கையில் மடியில் கொஞ்சம் சேர்த்து வைத்துக் கொண்டான்.

ஒருநாள் ராமுவை ஆனந்தன் தன்பக்கம் அழைத்தான்.

"தம்பி ராமு, நாங்க ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் நால்வர்தான் என்றாலும் இப்போது ஐவர்களாக இருக்கிறோம் என்பது உனக்குத் தெரியும். சின்னவனைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அவன் பெயர்தான் சின்னவனே தவிர செயலெல்லாம் மிகமிகப் பெரியது. அவன் நம்ப குடும்பத்திற்கு நான் செய்யமுடியாத எத்தனையோ பணிவிடைகளை மிகுந்த அக்கறையோடும் — பாச உணர்வோடும் செய்தது நம்ம எல்லோருக்குமே தெரியும்! நீ படிச்சவன். படிச்ச படிப்புக்கு என்றுமே பிழை வராது! இப்ப இல்லாவிட்டாலும் அது என்றோ ஒரு நாள் உன்னைக் காப்பாத்தும், ஆனா சின்னவன் பாவம்! என்ர பேரில இருக்கிற போட், வலையெல்லாத்தையும் அவன் பேருக்கு எழுதிக் குடுக்க வேணும். இதுக்கு நான் உன்ர விருப்பத்தையும் கேட்கத்தான் கூப்பிட்டனான்" இப்படி ஆனந்தன் சொல்லிக்கொண்டு போக ராமு, சட்டெனக் கேட்டான் "அண்ணிவங்கட சம்மதமில்லாம..."

## தெய்வ நம்பிக்கை ஆறுதல் அளிக்கும்

இரவில் தாயின் அருகில் படுத்து உறங்கும் குழந்தை திடீரென கண்விழிக்கிறது. அப்போது சுற்றும்முற்றும் சூழ்ந்திருக்கிற இருளைக்கண்டு அது அச்சமடைகிறது. அச்சம் தோன்றியதும் உடனே அதற்கு தாயின் நினைவு வருகிறது. அந்தத்தாய் எங்கே இருக்கிறாள் என்று தன் கைகளால் தடவிப் பார்க்கிறது. அவள் தன் அருகிலேயே படுத்திருக்கிறாள் என்பதைக் கண்டதும் அது அச்சம் நீங்கி ஆறுதல் அடைகிறது. அந்தத்தாய் என்ன செய்துவிட்டாள்? அவள் ஒன்றுமே செய்யவில்லை. அந்தக் குழந்தை கண் விழித்ததோ அல்லது கைகளால் தன்னைத் தடவிப் பார்த்ததோ எதுவுமே அவளுக்குத் தெரியாது. அவள் தன்னையும், தன் குழந்தையையும் மறந்தவளாய் உறங்கிக்கொண்டுதான் இருந்தாள் என்றாலும், அவள் தன் அருகில் இருக்கிறாள் என்ற உணர்வு ஒன்றே குழந்தையின் அச்சத்தைப்போக்கி அதற்கு ஆறுதலை அளித்துவிட்டது.

இதுமாதிரி, தெய்வம் நமக்கு எதுவும் செய்யவேண்டாம் தெய்வம் நமக்கு துணையாக இருக்கிறது என்ற உணர்வு ஒன்றே நம்முடைய அச்சங்களைப் போக்கும். ஆறுதலை நமக்கு அளிக்கும்.

- தமிழ்வாணன்

"துணிவே துணை"

"எல்லாற்ர சம்மதத்தோடதான் நான் இந்த முடிவுக்கு வந்தனான். ஆனா அது இப்பல்ல இன்னும் கொஞ்ச நாள் செல்லட்டும்! இப்ப சின்னவனுக்குத் தெரியாமல் இருப்பது நல்லது"

"ஏனண்ண இப்படிச் செய்தா என்ன?"

"எப்படி!"

"சின்னவனுக்கு நம்ம போட்டையும், வலையும் எழுதிக் குடுத்துப்போட்டு, நான் புதிசா ஒரு வலையையும் போட்டையும் வாங்கினா!..."

"மடக்கதையளக் கதையாத! நீ படிச்சிப் பட்டம் வாங்காம என்னப்போல இருந்திருந்தாக் காரியமில்ல! எந்தத் தொழிலையாவது எப்படியாவது செய்யலாம்! ஆனா நீ துறைபோகப் படிச்சிருக்கிறா! அதற்கேற்றபடி ஒரு தொழிலச் செய்தாத்தான் அது உனக்கும் பெருமை! நம்ம குடும்பத்துக்கு

## தொடர்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெருமை! இந்த ஊருக்கும் பெருமை!

''கைத்தொழிலச் செய்து அண்ணன் முன்னுக்கு வந்தான்! என்று ஊரவங்க சொல்லுறதப்போல ஆனந்தனின் தம்பி ராமு — — செல்லையாவின் இளைய பையன் ராமு — பாக்கியத்தின் மகன் ராமு படிச்சி முன்னுக்கு வந்தான்! என்று ஊர் சொல்ல வேணும்! நீ உத்தியோகத்துக்குப் போய்வாற அழக நான் என்ர கண்ணால காணவேணும்! அதுக்குப் பிறகு நான் செத்தாலும் காரியமில்லடா! ராமு, ஊரவங்கெல்லாம், ஒருவன் கைத்தொழிலச் செய்தும் முன்னுக்கு வரலாம், படிச்சும் முன்னேறலாம் என்று நம்ம குடும்பத்துக்கும் தெரிஞ்சிகொள்ள வேணும். அதுக்காகவாவது என்ர விருப்பத்த நிறைவேத்தமாட்டியா''

இதைச் சொல்லும்போது ஆனந்தனின் கண்கள் கலங்கி, குளமாகின.

அண்ணன் சொல்லுக்கு எதிர்கதை கதையாத ராமு ஏதும் பேசாமல் மெல்ல எழுந்தபோது சின்னவன், கையில் புகைந்துகொண்டிருந்த சிகரெட் டக்கெனக் காலின்கீழேபோட்டு அணைத்துவிட்டு அங்கே வந்தான்.

''அண்ணே உங்களுக்கு விசயம் தெரியுமா! சித்திராக்காட மூத்தமகள் சாமத்தியப்பட்டுப்போச்சி. இனிமேதான் உங்களுக்கு லக்கடிக்கப்போகுது! சாமாத்தியப்பட்ட நேரமும், நாளும் நல்லதாம்! மாமன் மாருக்குத்தான் பலன அள்ளிவீசப் போகுதாம்!'' என்று சின்னவன் சொன்னதைக் கேட்டு ஆனந்தன் சிரித்தான்.

"சாத்திரம் வச்சிக் கேட்காமலேயே நீ சொல்லிப் போட்டா! எனக்கென்னடா சின்னவா இதப்பாக்கிலும் அள்ளிக்கொட்ட வேணும்! மருமகள் பக்குவப்பட்ட பலன் தம்பி ராமுவுக்கு ஒரு நல்ல உத்தியோகமாக் பார்த்துக் குடுத்துதெண்டால் அதுவே போதும்! என்னால என் சகோதரங்கள மாத்திரம்தான் ஓரளவிற்கு கவனிக்க முடிஞ்சுது! இனிமே அதுகள்ற பிள்ளைகள-பிள்ளைகள்ற பிள்ளைகள நீங்களும் உங்கட உங்கட பிள்ளைகளும்தானே கவனிக்க வேணும்!''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே ராமு அண்ணி ஜெயந்தியைப் பார்த்தான். அவள் உள்ளத்தில் இருக்கும் வேதனைகளை பெரும்பாடுபட்டு மறைப்பதாக அவள் வதனம் காட்டியது.

''அண்ணனுக்கு பைத்தியம்! அண்ணியை வைத்துக் கொண்டே இப்படியெல்லாம் கதைத்தால் அவள் பிஞ்சு மனம் எவ்வளவு வேதனைப் படும் என்பதை அறியாமல் கிழவனுட்டம் ஏதோவெல்லாம் பேசுகிறுரே!'' என்று தனக்குள்ளேயே எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டானே தவிர அதை வெளியே சொல்லவில்லை.

சின்னவன், சித்திராவின் மகள் சாமாத்தியப்பட்ட கதையைச் சொல்லி ஆனந்தன் — ராமு பேச்சைத் திசை மாற்றியதும் ராமு அங்கிருந்து மெதுவாக எழுந்து வெளியே சென்றுன்.அப்போது பார்த்து, அங்கே சித்திரா, 'சாமத்திய விசளம்' சொல்ல வேகமாக வந்துகொண்டிருந்தாள்.

(தொடரும்)


## தொண்டன் வளர தொண்டு செய்வீர்

* இலங்கையில் வெளியாகும் ஒரேஒரு கத்தோலிக்க மாத சஞ்சிகை இது. இதனை வளர்ப்பது கத்தோலிக்கர்களின் தலையாய பணி ஆகவே குடும்பத்துக்கொரு தொண்டன் வாங்குங்கள்.
* அடுத்தவருக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
* தனிப்பிரதி வாங்குவோர் ஆலயப் பங்கில் உள்ள எமது முகவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
* குறிப்பிட்ட விலையிலும் குறைவாகப் பெற விரும்பினால் சந்தாதாரராகச் சேருங்கள். தபால் செலவை நாம் ஏற்று குறைந்த விலையில் அனுப்பி வைப்போம். ஆண்டுச் சந்தா ரூபா 35/- மட்டுமே.
* முகவர்கள் இல்லாத இடங்களில் நீங்களே முகவராகலாம். ஐந்து பிரதிகளுக்கு மேல் பெற்று விற்றுத் தருவோருக்கு பிரதிக்கு 25 சதம் தள்ளுபடி உண்டு.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்:

**ஆசிரியர் தொண்டன்,**
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம் - மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# திருமறையைத் தெரிந்துகொள்வோம்

றெக்ஸ்

**கேள்வி :** ஒவ்வொரு உண்மைக் கிறிஸ்தவனும் ஏழு தேவதிரவிய அனுமானங்களில் ஆறு மாத்திரமே பெறலாம் என எனது ஆசிரியர்களும் குருக்களும் கற்பித்திருக்கிறார்கள். ஆனால் தற்போது ஏழு தேவதிரவிய அனுமானங்களையும் பெறக்கூடிய நிலைக்கு மனிதன் மாறியுள்ளான். இதைத் திருச்சபை மனிதனுக்கு ஏற்ற வகையில் அவன் உணர்வில சிந்தனையில் மாற்றியமைந்துள்ளதா? என விளக்குவீர்களா?

மார்க் ஜோர்ஜ்
தாளங்குடா.

**பதில் :** எல்லாத் திருவருட் சாதனங்களும் மனிதனின் மீட்புக்காகவே ஏற்படுத்தப்பட்டன. கிறிஸ்து ஒன்று, இரண்டு, மூன்று... என்று எண்ணி 7 திருவருட் சாதனங்களைப் பிரித்துப்] பிரித்து ஏற்படுத்தவில்லை. அல்லது இது ஒரு திருவருட்சாதனம் இதை நீங்கள் கட்டாயம் பெற்றுத்தான் ஆகவேண்டும் என்று கட்டாயமாகத் திணிக்கவுமில்லை. (அரு. 6/53 இல் குறிப்பிடப்படுவது வேறு) ஆதித்திருச்சபை இறைமகன் யேசுவின் போதனைகளையும் அவரது அருட்செயல்களையும், பின்னர் வந்த தத்துவ இறையியலின் பின்னணியில் ஏழாக இனங்கண்டு பிரித்தது. அப்படியே வழிவழியாகப் போதித்துள்ளது.

ஏழு திருவருட் சாதனங்களில் ஒருவர் 6 மட்டும் (குருத்துவம் அல்லது இல்லறம்) பெறலாம் என்பது கி. பி. 12ம் நூற்றாண்டிலேயே திருச்சபையில் ஒரு திருமுறைச் சட்டமாக (CANON LAW) பிரகடனப்படுத்தப்பட்டது. தாங்கள் இதற்கு முன் ஒருமுறை கேட்ட கேள்வியில் நல்ல குடும்பத் தலைவர்களே இறைவனின் திருச்சபையை மேய்க்கும் பணிக்குத் தெரிந்தெடுக்கப்பட்டனர் என்பதை எண்பித்து விளக்கினேன். அப்போஸ்தலர் காலத்துத் திருச்சபையிலும் ஏறத்தாழ 3ம் நூற்றாண்டு வரையும், குருத்துவம் இல்லத்தோடு ஒன்றாகப் பிணிக்கப்பட்டிருந்தது என்பது மட்டுமல்ல, இல்லற வாழ்வின் வெற்றிகளையும் தகுதிகளையும் கொண்டே குருத்துவப் பட்டமும் ஆயர் பதவிகளும் அளிக்கப்பட்டன என்பதும் ஐயம் திரிபற நிரூபிக்கப்பட்டுள்ளது. (காண் I மத்தேயு 3/2—13; தீத்து 1/6—9) கத்தோலிக்கத் தாய்த்திருச்சபையில் (அதாவது பாப்பரசரின் அதிகாரத்திற்குள் அடங்கிய திருச்சபை) லத்தீன் சபைக்குள் குருக்கள் திருமணம் முடிக்கக்கூடாது என்னும் சட்டம் இருந்தாலும் அதே எலலைக்குள் அடங்கும் கொப்டிக் (கிப்திய) சபைகளிலும், கிரேக்க ருசிய நேர்வழித் திருச்சபைகளிலும் (Greek/ Russian Orthodox Churches) குருக்கள் திருமணம் முடிப்பது சகஜமானது. மெதடிஸ்த / அங்கிளிக்கன் போன்ற பிற கிறிஸ்தவ சபைகளிலும் இது சகஜம்.

அப்போஸ்தலர் காலத்திலும் ஆதித்திருச்சபையிலும் இல்லாத ஒரு சட்டம் பிறகாலத்தில் வந்ததனால் மாறியது மனிதனல்ல - மாறியது திருச்சபை சட்டங்களை காலங்களின் தேவைகளுக்கும் உசிதங்களுக்கும் ஏற்ப உருவாக்கும் திருச்சபைக்கு அவற்றை அதே காரணங்களுக்காக மாற்றும் அவசியமும் ஏற்படத்தான் செய்யும்.

குருத்துவத்துக்கும், இல்லறத்துக்கும் இடையில் எவ்வித முரண்பாடும் கிடையாது. குருத்துவமும் இல்லறமும் ஒருங்கே இணையக்கூடியது என்பதனாலேயே யூதக் குருத்துவமும் ஆதிக் கிறிஸ்தவ குருத்துவமும் இல்லறத்தோடு ஒன்றி அமைந்தது. அதே வேளையில் இறையரசுக்காக தங்களை முற்றும் அர்ப்பணித்து திருமண வாழ்வில் ஈடுபடாது ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தத்துவத்தை மேற்கொண்ட பிரமச்சாரியக் குருக்களும் அக்காலத்தில் இருந்தனர்.

துறவறம் என்பது வேறு அது இல்லறத்தோடு சம்பந்தப்படாதது. துறவிகள் சமூகத்தினின்று, குடும்பத்தில் நின்று பிரிந்து காடுகளிலும், மடங்களிலும் தனியாகவோ, கூட்டாகவோ வாழ்ந்து செபதபங்களை மேற்கொண்டனர். ஆதியிலேயே துறவிகள் குருக்களாக இருந்ததில்லை. ஏறத்தாழ 4ம் நூற்றாண்டுக்குப் பின்னரே மடங்களில் வாழ்ந்த துறவிகளுக்குக் குருத்துவம் அளிக்கப்பட்டது. அதுவும் அக்காலத்தின் தேவைகளையும், உசிதங்களையும் ஒட்டியே அச்சட்டம் இயற்றப்பட்டது. அதற்கான இறையியற் பின்னணியும், மறைநூல் மேற்கோள்களும் பெறப்பட்டன.

இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், கீழைத்தேச திருச்சபையில் தொடங்கிய 'என்கிறட்டிஸம்' (Encratism) எனப்படும் ஒரு தப்பான கொள்கை படிப்படியாக முழுத்திருச்சபையிலும் பரவியது, இப்பேதகத்தின்படி (Heresy) மனிதன் இடுப்புக்குமேல் இறைவனின் சாயல் எனவும், அதற்குக்கீழ் சாத்தானின் சாயல் எனவும் கருதப்பட்டது இப்பேதகத்தால் பாதகமான விளைவுகள் உண்டாயின. திருமண வாழ்வு, தாம்பத்திய உறவு, மக்கட்பேறு முதலிய புனிதமான நிலைகள் யாவும் இழிவானவையாகவும் கணிக்கப்பட்டன. பாலியல் விரதத்துவமே மனித இயல்பின் மாண்பும் பெலமும் என்றும்; இழிந்தோருக்கும் பலவீனர்களுக்குமே திருமண வாழ்வு தேவை என்னும் கருத்து பரம்பியது. இதன் காரணமாக 'இல்லறம் இழிந்தது துறவறமே உயர்ந்தது', என்னும் அபிப்பிராயம் படிப்படியாகப் பரவி வேரூன்றலாயிற்று எனினும்

கி. பி. 12ம் நூற்றாண்டின் II இலத்தரன் சங்கத்திலும் ஏற்படுத்தப்பட்ட திருமுறைச் சட்டங்களுக்குட்பட்ட குருத்துவமே இன்று நாம் லத்தீன் திருச்சபையிற் காணும் நிலை. விரதத்துவ நிலையை ஏற்றுக்கொண்ட குருக்களே உண்மையான குருக்கள், இல்லறத்தில் இருந்துகொண்டு குருத்துவ சேவை புரியும் குருக்கள் இரண்டாம் ரகக் குருக்கள் என்று கருதுவது வேதாகம ஆதாரமற்றது. கிறிஸ்தவ உலகில் ஏறத்தாழச் சமபங்காக வாழும் கத்தோலிக்கரல்லாத ஏனைய கிறிஸ்தவ குருக்கள் இல்லறத்தோரே — அவர்களது சேவையும் அர்ப்பணமும் தியாகங்களும், துறவற அல்லது விரத நிலையிலுள்ள குருக்களது சேவைக்கும் அர்ப்பணத்துக்கும் தியாகத்துக்கும் எள்ளளவும் குறைந்ததல்ல. இன்று இறையியல் வித்தகர்கள், குருக்கள் உட்படப் பல பொது நிலையினர்களும் திருச்சபையை நோக்கி பல கேள்விகளை எழுப்புகின்றனர்.

தனது குருக்களுக்குரிய சட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரம் திருச்சபை என்னும் சமூகத்துக்கு உண்டு என்பது உண்மையே அதை எவரும் மறுக்கமுடியாது. ஆயினும் அச்சட்டங்களை முற்றிலும் வேதாகமத்தின் அடிப்படையில் உள்ளதா? அவை இன்றைய கால கட்டத்தையும் தேவைகளையும், உசிதங்களையும் மதிக்கும் வகையில் உள்ளனவா? பல கலாச்சாரங்களையும் பல்வேறுபட்ட இனங்களையும், பாரம்பரியங்களையும் கொண்ட மக்களை உள்ளடக்கிய திருச்சபையில் சேவை செய்யும் குருக்கள் பன்மைப்படுத்தப்பட்ட பல்வேறு விதமான சேவையில் (Pluralistic Ministry) ஈடுபடவேண்டிய அவசியம் உண்டல்லவா? ஆன்மீகம் ஆலயங்களிலும், மடங்களிலும் மட்டுமல்ல ஆலைகளிலும், சாலைகளிலும் வேலைத்தளங்களிலும் ஏன் அரசியலிலும் கூடத்தான் உண்டு என்பது உண்மையாயின், அவற்றிலும் கூடக் குருத்துவம் நுழைய வேண்டிய அவசியம் இல்லையா?

குருத்துவம் ஒரே வழியில் ஒரே மாமூலான கட்டமைப்பில் மாமூலான சேவைகளில் (அங்கி பங்கு, தேவதிரவிய அனுமானங்களை வழங்கல் சிறு குழுக்களை நிர்வகித்தல் போன்ற சேவைகள்) மட்டும்தான் கட்டாயமாக அமையவேண்டுமா? கிறிஸ்தவ குருத்துவத்தின் இயல்பும், சாயலும் (The Essence & Image Of Priest Hood) இத்தகைய சேவைகளிலும் அமைப்பு முறையிலும் மட்டும்தான் அடங்குமா? வித்தியாசமான அமைப்பு முறையிலும் வேறுபட்ட சேவைகளிலும் அவை பரிமளிக்க முடியாதா? இவற்றிற்கு உரோமாபுரியின் விடை என்ன? பொறுத்திருந்து பார்ப்போம்!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொழும்பு, ஆரும் சின்னப்பர் நிலையம், "புபுதுவ" இயக்குநருக்கு, திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட குருக்கள் மன்றம் அனுப்பிய ஒரு தீர்மானம்

*(கடந்த ஜூலைத் திங்கள் 13ம் நாள் திருகோணமலை - மட்டக்களப்பு மறை மாவட்டக் குருக்கள் மன்றம், கொழும்பு ஆரும் சின்னப்பர் நிலையத்தில் இயங்கும் "புபுதுவ" இயக்குநருக்கு அனுப்பி வைத்த அறிக்கையின் முழுவிபரத்தையும் இங்கே தருகின்றோம். இவ்வறிக்கை பற்றிய செய்திகள் நாளேடுகளில் வெளிவந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.)*

1987 ஜூன் 19ல் திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட குருக்கள் மன்ற அங்கத்தவர் இயற்றிய பல தீர்மானங்களின் பின் அவர்களால் விசேடமாக கவனம் கொள்ளப்பட்ட பின்வருவனவற்றைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறோம்:-

1. அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் இடம் பெற்ற சங்கநாயக்கரும் மற்றும் முப்பத்தியொரு பிக்குகளும் படுபாதகமான முறையில் கொலை செய்யப்பட்டதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. நாம் எவ்வாறு யேசுவின் நற்செய்தியை உலகுக்கு எடுத்துக் கூறுகிறோமோ, அவ்வாறே அப்பாவிகளான இவர்களும் புத்தபெருமானின் செய்தியை எடுத்துக் கூறுபவர்கள்.

2. அண்மையில் இந்தியாவினால் ஆகாயமார்க்கமாக உணவுப் பண்டங்கள் போடப்பட்டதை இலங்கையின் ஆதிபத்தியவான் எல்லைக்குள் பலவந்தமாக ஊடுருவியதாகக் கருதினாலும் கூட, இது அண்மையிலுள்ள ஒரு நாட்டில் அல்லலுறும் மக்களுக்கு அளிக்கும் மனிதாபிமான உதவியே அன்றி பகைமையைத் தூண்டும் நடவடிக்கை அல்ல என்பதையும் சபை நோக்குகின்றது.

3. கிறிஸ்துநாதர் சொன்ன வாக்கியத்தின்படி "பசித்தவேளையில் எனக்கு உணவு அளித்தீர்கள், தாகம் எடுத்தபோது எனக்குப் பானம் தந்தீர்கள்" என்றார். இதை நினைவில் நிறுத்தும் வேளை விலை மதிக்க முடியாத மனித உயிர்கள் அரசியல் ஆதாயமேடையில் பலியாவதை பார்த்துக் கண்மூடிக் கொண்டு சும்மா இருக்க முடியாது என்பதையும் இச்சபை சுட்டிக்காட்டுகிறது.

4. தென் பகுதிக் கத்தோலிக்கரும், ஏன் கொழும்பு மேற்றிராசனத்தைச் சேர்ந்த "புபுதுவ" (புத்துயிர் இயக்கம்) நிலையத்தைச் சேர்ந்த சகோதரர்களும் கூட பிணைய நிகழ்ச்சிக்கு உண்மை நிலையை உள்ளபடி உணராமல் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்ததும், பாதயாத்திரை சென்றதும் வருந்தத்தக்கன. இது ஒரு ஆன்மீக நிகழ்ச்சியா அல்லது வேறு ஏதுமா? என எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

5. இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களின் துன்பத்தையும் துயரத்தையும் பின்வரும் காரணங்களின் மூலம் இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தச் சகோதரர்களின் மன உணர்வில் தொட்டுக் காட்ட இச்சபை விரும்புகிறது.

   1) ஆயுதப் படையினரின் அட்டூழியங்களாலும் கையாலாகாத அடாவடித்தனத்தலுாம் பல வீடுகள் வேண்டுமென்றே அழிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2) தடுப்பு முகாம்களிலிருந்து பல விதமான கொடூரமான வதைப்புக்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகி உடலும் உள்ளமும் ஊனமுற்ற பரிதாப நிலையில் தமது மகன்மாரையும் கணவன்மாரையும் திரும்ப அழைத்து வந்துள்ளனர்.

3) தடுப்பு முகாம்களில் தமது மகன்மாருக்கும் கணவன்மாருக்கும் விதி எப்படி விளையாடியிருக்கிறது என்பதையும் கூட அறிய முடியாத பரிதாப நிலையில் உள்ளனர்.

4) தமது வீட்டிலுள்ள ஒரேயொரு உழைப்பாளியைக் கூட இழந்த பரிதாப நிலையில் பட்டினிக்கும் சாவிற்கும் இடையில் ஊசலாடும் பல உயிர்கள்.

இவை அனைத்தும் சபையின் தோளில் சுமத்தப்பட்டுள்ள உணர்வுகளாகும்.

6. மக்களுக்குப் பொதுப்பணியாற்றும் பல பொது நிலையங்களான மருத்துவமனைகள், பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்கள், மடாலயங்கள், போன்ற பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முக்கிய இடங்கள் அநியாயமாக அழிக்கப்படுவதோடு மன்னார், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளில் கத்தோலிக்க குருக்கள், துறவிகள், போதகர்கள் முதலானோர் படுபாதகமாகக் கொலை செய்யப்பட்டதையும் அதிர்ச்சியோடும், ஆழ்ந்த கவலையோடும் இச்சபை முன்வைக்கிறது.

ஆகவே தென்பகுதிச் சகோதரர்கட்கு, வடக்கு, கிழக்கு மக்கள் படும் வேதனையையும் துன்பத்தையும் மனதிற் கொண்டு சாதகமான வாய்ப்பினை ஏற்படுத்தும் ''பாதயாத்திரை''களை நடத்துவதை விடுத்து, தனியே ஒரு பகுதியினரை மட்டும் கருத்திற் கொள்ளாது எல்லாச் சமூகத்தினரையும் உள்ளடக்கி அவர்கள் அனைவருக்கும் அன்பும், நீதியும் கிடைக்கும் வகையில் சமாதானத் தீர்வு ஏற்பட ஆக்கபூர்வமான நடவடிக்கை துரிதகெதியில் எடுக்கப்பட வேண்டுகிறோம்.

ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக.
அன்பும் இரக்கமும் உண்டாவதாக,
தங்கள் உண்மையுள்ள.

அருட்தந்தை. ஜே. எஸ். அரசரத்தினம்
செயலாளர். குருக்கள் மன்றம்
திருமலை - மட்டக்களப்பு மறைமாவட்டம்.

அருட்தந்தை ஒஸ்கார் அபேரத்தின
''புபுதுவ நிவாச''
ஆரும் சின்னப்பர் நிலையம் (ஐந்தாம் மாடி)
கொழும்பு.

பிரதி
அதிவண. டாக்டர் பிறுங்க் மார்க்கஸ் பெர்னான்டோ
தலைவர் CBCSL
ஆயரகம், சிலாபம்.

சகல ஆயர்களுக்கும்

— (தமிழாக்கம் - மட்டூர் ராம்) —

## சிந்தனைச் சிதறல்கள்

'பிறரை மாய்க்க எண்ணுபவன் தன்னையே அழித்துக்கொள்வான் இதுவே இயற்கையின் நியதி' — காந்தியடிகள்

''சாதனைகளிலெல்லாம் மேலான சாதனை ஒருவன் தன்னைத்தானே வெற்றிக்கொள்வது. இவ்வெற்றியைத் தெரிந்து கொண்டவன் தோல்வியை அறிய வாய்ப்பேயில்லை.'' — A. J. குரோனின்

''வன்முறையைப் பிரயோகித்தால் சுயமாக அது தீமையுள்ள தாக்கத்தை ஏற்படுத்தும்'' — ஈன்ஸ்டீன்

''நீண்டகாலப் பகைமை என்பது இருதரப்புமே தவறு எனக் காட்டுகிறது'' — வோல்ட்டர் —


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இது பொது நிலையினர் ஆண்டு

புளியடிக்குடா ஆனந்தா A. G. இராஜேந்திரம்

சென்ற இதழ் தொடர்ச்சி...

இரண்டு - ஒரு பங்கின் பொறுப்பை ஏற்று அதை வழிநடத்தவரும் குருதாம் ஒரு 'மேய்ப்பன்' என்ற மேலான உணர்வையும் எல்லாம் நானே என்கிற ஆளுமையையும் கொண்டு வருவது பல தடைகளுக்குக் காரணமாக அமைகிறது. 'தலை ஆடு போகும் வழியில் மந்தைகள்' என்பதெல்லாம் அறியாமை இருளில் பாமரன் மூழ்கிக் கிடந்த காலகட்டத்திற்குப் பொருத்தமாக இருந்தது. கல்வியறிவும் பகுத்தறிவும் வளர்ந்து விட்ட இன்றைய நிலையில் - எதையும் ஏன் எதற்கு எப்படி என்று கேட்டுப் பழகிவிட்ட மக்கள் தம்மை 'மேய்க்க' முயல்பவரை ஒதுக்க முனைவது ஒன்றும் ஆச்சரியமில்லை. அறிவாற்றல் என்ற அடிப்படையில் சதாரண மக்கள், மறையறிவு என்ற விடயம் தவிர மேலான நிலையில் இருப்பதை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். மறையறிவு தொடர்பாக அவர்களது அறிவு அவ்வளவு தூரம் மட்டமானதாகக் கருதப்பட முடியாது. எனவே மக்களுக்கு மதிப்பளிக்கும் மனப்பான்மையையும், அவர்களது கருத்துகளுக்குச் செவிசாய்க்கும் மனப்பான்மையும் குருக்கள் போன்ற திருச்சபை அதிகாரிகளுக்குத் தேவை இல்லாது போனால் மக்கள் தம்மை மதிக்காத ஒருவரைத் தலைவனாக அங்கீகரிக்கப் போவதில்லை. இந்நிலை தொடருமானால், மக்கள் தம்மை அந்தத் தலத் திருச்சபையின் செயற்பாடுகளினின்றும் ஒதுக்கிக்கொண்டு விடுவார்க்ள்.

மூன்று - குருக்கள் போன்றோரது தலைமைத்துவ, ஆளுமைப் பண்புகளும் ஒரு பங்குத் திருச்சபையின் இயக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தச் செய்கின்றன. ஒருவர் தனது செயற்பாட்டை மும்முரமாகக் கொண்டிருப்பார். இதனால் பலரையும் அண்டி, பல சபைகளையும் உருவாக்கி, எல்லாவற்றையும் மேற்பார்வை செய்து பம்பரமாகச் சுழன்றுடுவார். சில சமயங்களில் சிலர் சகலதும், சகலரும் தம்மைச் சுற்றியே சுழலும் அளவுக்கு செயற்பாட்டை நிலைப்படுத்துவர். பின் குறிப்பிட்ட குரு அவ்விடம் விட்டு நீங்கும் நிலை ஏற்படும் போது, அவரது முண்டிலே நின்ற அத்தனை செயற்பாடுகளும் 'முறிந்து' போகும். இதை யடுத்து வருபவர் வேறொரு அணுகுமுறையைக் கையாளுவார். தம்மை 'ஆதரிப்போரை' மட்டும் கொண்ட குழுக்களை உருவாக்கிக் கொள்ளுவார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊர் மக்களுக்கும், இந்த 'தலைவர்களுக்கும்' ஒத்துப்போகாது; குழப்பம் எழும். குரு எல்லாம் எனக்குத் தெரியும் என்பார். செயற்படுவார். முயன்று நின்ற எதிரணி சோர்ந்து ஒதுங்கிவிடும்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில், மும்முரமாகச் செயற்பட்டு, ஒழுங்கு முறையில் ஒரு வளர்ச்சியை மிகுந்த சிரமங்கள் மத்தியில் ஒரு பங்கு கண்டுவரும்போது புதிய குரு வருவார். அவரோ இருக்கும் வரை 'நல்லவராக' இருந்துவிட்டு அல்லுத்தொல்லையின்றி போய்விடும் முனைப்புடன் செயற்படுவார். இதனால் இயங்கும் குழுக்களை அனாதரவாய் விட்டுவிடுவார். மக்களும் செயலிழந்து போவார். பின்னர் இத்தவறை நிவர்த்தி செய்ய இன்னுமொரு குரு வந்து பகீரதப் பிராயத்தனம் செய்யவேண்டியிருக்கும்.

முக்கியமாக ஒரு பங்கின் தலைமை ஏற்று வரும் ஒரு குரு தன்னை மக்கள் பணியாளனாக மாற்றி, பொது நிலையினரை பலநிலைகளிலும் செயற்பட வைத்து ஆதரவையும், ஆலோசனைகளையும், உற்சாகத்தையும் கொடுத்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பட்சத்தில் அம்மக்கள் தாமாகச் செயற்படும் நிலை உருவாகும். இவ்வாறு உருவாகின்ல் தனிப்பட்ட ஒரு மனிதர் இருந்தாலும், மறைந்தாலும், இடம்விட்டுப்பெயர்ந்தாலும் மக்கள் - அவர்கள் இபங்கிக் கொண்டேயிருப்பார்கள். ஆனுல் பெரும்பாலான பங்குத்தலங்களில் மந்த நிலையில் மக்கள் செயற்பாடு அமைவது ஒரு நிதர்சனமான அம்சமாக இன்று காணலாம்.

நான்கு - வெளிநாட்டு உதவி வளங்கள் பொது நிலையினரை அலட்சியப் போக்கிலே ஊறவைத்துவிட்டன. மக்கள் இவ்வாறான உதவியை எதிர்நோக்கி நிற்பவர்களாக மாறிவிட்டார்கள். அதேசமயம் வசதிபடைத்தவர்கள் தம்மத்தியில் உள்ள வறிய - தேவைகளிலுள்ள - மக்கள் மட்டில் அலட்சியமாக இருக்கவும் வைத்துவிட்டன. இவ்வாறான உதவிகள் மக்களுக்கான எல்வகை உதவிகளும் அவர்கள் சுயமாக - கௌரவமாக - சுயபலத்தில் - சொந்தக் காலில் - நிற்கும்படி அமைவது அவசியம் - இதுதான் அர்த்தமுள்ள தருமம். மாறாக வழங்கப்பட்ட, படுகின்ற உதவிகளெல்லாம் மக்களைத் தொடர்ந்தும் கை நீட்டுபவர்களாகவே நிரந்தரமாக்கிவிட்டன. திட்டமிட்ட எதிர்கால நோக்கோடு தலத் திருச்சபைகள் மக்களது வறுமைபோக்க சரிவரத் திட்டங்கள் வகுக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல 'சும்மா' இருந்து சாப்பிடுவதில் 'சுகம்' கண்டுவிட்ட பொது நிலையினரில் ஒருபகுதியினரும் 'கடின' உழைப்புக்குத் தயாரில்லாத கேவலமும் மாறுவதற்குரியதொன்ருக இருக்கிறது.

இப்படி அப்படியாகப் பல காரணங்களை இன்றுள்ள பொது நிலையினரின் நிலை குறித்து கூறிக்கொண்டே போகலாம். ஆனுலும். உண்மையில் பொது அறிவு வளர்ந்துள்ள இன்றைய காலகட்டத்தில் நான், நாம், நம் வீடு என்ற சிறுவட்டத்தை விட்டு 'நமது பங்கு' என்கிற பெருவட்டத்திற்கு வந்து சேர வேண்டிய கடமை இன்று பொது நிலையினர்க்கே உரியது. சாதாரண வாழ்வில் உரிமைகளுக்காகப் போராடி மாய்கின்ற மனிதன் (பொது நிலையினன்) திருச்சபை எனும் மறை உலகிலும் தனது உரிமையைப் பெற்று அதனைப் பேணிக் காத்து வளர்ப்பது அவனது கடமை என்பதை உணர்ந்து செயலில் இறங்குதல் வேண்டும்.

## பெரும் பொறுப்பு

ஒருவன் கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினனுக மாறியமைவது அவனது சுய விருப்புடனல்ல. இது உண்மைதான்! நமது பெற்றோர், அவர்களின் முன்னோர் கொண்டிருந்த விசுவாசத்தினடிப்படையில் நாம் திருமுழுக்காற்றுண்டு கத்தோலிக்கர்களாகின்றோம். நமக்கான இருபினையாளர்களாக ஞானப் பெற்றோர் அமைகின்றனர். நாமறியாப் பருவத்தே நம்மை ஒரு வாழ்வில் உட்படுத்துவது மனிதத்துவத்திற்கு தாக்கமாக இருக்கலாம். ஆனுல், இதுதான் இறைதத்துவம். ''என்னை நீங்கள் தெரிந்தெடுத்ததில்லை. நானே உங்களைத் தெரிந்து கொண்டேன்...'' என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளின் உள்ளார்ந்த அர்த்தம் நம்மால் தெளிவாக உணரப்பட வேண்டும். இறைவனை நாம் அறிந்துகொள்ளும் முன்னமே இறைவன் நம்மைத் தேடிக்கொள்கிறார்; அவரது 'தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் இனத்தில்' ஒருவராக நம்மையும் சேர்த்துக் கொள்கிறார். ஒரு நிமிடத்திற்கு இலட்சக் கணக்கில் உயிர்கள் சனனமாகிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் எத்தனை எத்தனையோ பேர் எத்தனையோ வழிகளில் வாழ்ந்து வர அவர்களிலிருந்து சற்று மாறுபட்டவர்களாய் இறைமகன் கிறீஸ்துவில் ஒன்றிக்கும் பேறு கொண்ட பல்லாயிரவரில் நாமும் ஒருவராக ஆக்கப்படுகின்ருேம், அது எவ்வளவு மேன்மையானது! எவ்வளவு பெறுமதியானது!! எவ்வளவு பாக்கியமானது! இதை உணரவேண்டியது எமக்குள்ள தலையாய பொறுப்பாகும்.

இவ்வாறான பெறும் பேற்றுக்களான நாமும் அதன் முழுமையான பலனை அனுபவிக்கும் அந்தஸ்தும், தகுதியும் உள்ளவர்களாக எம்மை மாற்றியமைக்க வேண்டும். அழைக்கப்பட்ட அல்லது தெரிந்து கொள்ளப்பட்ட வாழ்க்கைக்கு உகந்தவர்களாக நாம் மாறியமைய வேண்டும்.

திரு முழுக்காற்றின்போது நாம் ஒரு 'அழைக்கப்பட்ட' சமுதாயத்தின் உறுப்பினராக மாறுகின்ருேம். இதனுலே நாம் திருச்சபையாகின்ருேம். ''நாமே திருச்சபை; திருச்சபையே நாம்'' என்கிற மனப்பாங்கு எப்மில் எமது இறுதி மூச்சுவரை நிலை பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இது தவிர இதே திருமுழுக்காற்றின் மூலமாக கிறீஸ்துவின் முப்பெரும் பணிகளில் பங்கு கொள்ளும் கடமையையும் பெற்றுக் கொள்ளுகின்றோம் என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இக்கடமை பற்றி எமக்குத் தெரியாதென்று சொல்லி எம்மால் பொறுபபுகளினின்றும் விலகிக்கொள்ள முடியாது. ஒரு சமுதாயத்திற்காக சட்ட திட்டங்கள் உருவாக்கப்படுகின்றதுபோல், திருச்சபை எனும் சமுதாயத்தின் கடப்பாடுகளாக இக்கடமைகள் அமைகின்றன. ''சட்டம் தெரியாதென்பது சாட்டுமாகாது போக்குமாகாது'' என்பது சட்டத்துறை வியாக்கியானங்களில் ஒன்று. இதுவே இங்கும் பொருத்தமாக் அமைகிறது.

## முப்பெரும் பணி

குருத்துவப்பணி, அரசபணி, சான்று பகரல் பணி, என்பவையே கிறீஸ்துவின் முப்பெரும் பணிகளாகும். இம்மூவகைப் பணிகளில் ஈடுபட்டுழைக்க வேண்டியது எமது கடமை. இதையே கிறீஸ்து நம்மிடம் வேண்டுகிறார் எனவே எம்மால் கூடுமானவகையில் இப்பணிகளில் ஈடுபட்டேயாக வேண்டும். என்ற கட்டாயம் எமக்குண்டு. இப்பொறுப்பை நிறைவேற்றுமல் 'மெத்தனமாகவும்' அலட்சியமாகவும் இருந்துவிட்டு பிறர்மீது குற்றஞ் சாட்டுவதால் ஒரு கத்தோலிக்கன் அடையக் கூடிய நன்மை எதுவுமில்லை. மாறாக, ஆள் காட்டி விரல் நீட்டி குறைநாம் சொல்லும் வேளை இல்லை தவறு உன்னில்தான் என்று ஏனைய நான்கு விரல்களும் மடிந்து நம் நெஞ்சைக் குத்துவதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதேசமயம் இந்த பொறுப்புக்களை நாம் நிறைவேற்றுவதற்கு எவராலும் எமக்குத் தடைபோட முடியாது - இறைவனைத் தவிர! திருமுழுக்கானது எனக்குக் கொடுத்துள்ள உரிமைகளை என்னிடமிருந்து பறிக்க திருச்சபை அதிகாரிகளாலோ, சிவில் - அரசியல்-அதிகாரிகளாலோ தடுக்கமுடியாது. ஒரு பங்குத்தளத்தின் விசுவாசிகள் கூட்டத்தில் ஒருவன் என்றவகையில் எனது வாழ்விடத்தில், எனது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் கிறீஸ்துவின் பணிகளில் எதையாவது ஒன்றை எப்படியாவது நாம் நிறைவேற்றியே ஆகவேண்டும். இவ்வுரிமையையும் பொறுப்பையும் யாருக்கும் தாரை வார்த்துவிடவோ, யாராலும் பறித்துக் கொள்ளும்படி விட்டுவிடவோ நாம் தயாரில்லை என்கிறமனநிலையும், உறுதியும் பொதுநிலையினருக்கு வரவேண்டும். இருப்பினும் எமது பணிகளிலும், பாதையும் தெளிவாக - சரியாக - நேர்மையாக - உண்மையாக்- எத்திருச்சபையின் உறுப்பாக அமைகிறோமோ அதே திருச்சபையின் விசுவாசப்படிப்பினைகளுக்கமைவானவையாக அமைய வேண்டியது தவிர்க்கமுடியாத அடிப்படை அம்சமாகும்.

எமது பங்கு, எமது பணி, எமது திருச்சபை - அதன் வாழ்வும், வளமும், உயர்வும் எனது வாழ்வு, வளம், உயர்வு என்று நம்மால் கருதப்பட வேண்டும். அதன் முன்னேற்றத்திற்கு உழைக்கும் ஆர்வமும், வேகமும், ஆசையும் எம்மில் உருவாக வேண்டும். பங்குத்தளமொன்றின் ஆலயத்தை அண்டியதாக, அதன் வழிபாட்டை அர்த்தமுள்ளதாக்கும் வாழ்வாக் - நம் மத்தியில் உள்ள ஏழை எளியவரைப் பராமரிக்கின்றதாக எமது வாழ்க்கை மாறியமைய வேண்டும்; செபமும், தபமும் எமது வாழ்வின் ஓர் அம்சமாக மாறியமைய வேண்டும் இதுவே இந்த பொதுநிலையினரின் ஆண்டு எம்மில் உருவாக்க வேண்டிய மாற்றமாக அமைய வேண்டும்.

இதையே திருச்சபையால் இவ்வாண்டில் சாதிக்கக் கூடுமாகில், அது அதன் மறுமலர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. (முற்றும்)

உனது கண்களை சரியாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள். காரணம் நீ மற்றவர்களோடு பேசும்போது உனது வாயைவிட கண்கள் அதிகம் பேசுகின்றன.


கோயிலுக்குள் உடல் முழுவதையும் ஈரமாக்கிக்கொண்டு நுழைகின்ற சில பக்தர்கள் ஈரமுள்ள இதயத்தோடு நுழைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 44

(தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமடல்)



பரிசு:

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**30-08-87**

முழுப்பெயர்:..........................................................................................

முகவரி :..........................................................................................

..........................................................................................

## இடமிருந்து வலம்

1. பெண்களுக்கு அழகு செய்வது.
3. ஆசிரியர் தன்னையும் இவ்வாறு தாழ்த்திக் கொள்கிறார்.
5. இவர்களுள் ஆதரவற்றவர்களைச் சபை பார்த்தது.
7. பதற்றத்தோடு இது கொடுக்கப்பட்டால் பாவத்தில் விழ நேரிடும்.
11. செல்வம் படைத்தோர் செய்ய வேண்டியதுக்கு முடிவு இல்லை.
12. தந்தையின் தந்தையும் நன்றிக்குரியவர்.
15. இது மட்டும் குடிப்பதை நிறுத்தும்படி கூறுகின்றார்.

## மேலிருந்து கீழ்

1. கைம்பெண்கள் சபையின் வயது எல்லை.
2. ஆசிரியர் கடிதம் எழுத இயேசுகிறிஸ்துவிடமிருந்து பெற்றது
4. உயிர்த்த கிறிஸ்துவுக்குக் கிடைத்த மகிமை.
6. காலம் மாறினால்?
8. அழியக்கூடிய உடலை இப்படியும் கூறலாம்.
9. இவர்களில் ஒருவகையினர் தாய்மாராகக் கருதப்பட வேண்டியவர்கள்
10. இயேசுவுக்கு வழங்கப்பட்ட மற்றுமொரு பெயர்.
11. செபங்களில் முக்கிய இடம் வகிக்க வேண்டியது.
12. இது கழுவுதல் நற்செயல்களில் சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

13. சொற்களைப்பற்றியும் இது வரலாம். வந்தால் எல்லாம் குழப்பம்தான்.

14. அடிப் படையைக் குறிக்கப் பயன்படுத் தப்படும் உருவகம்.

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 42 முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. பர்னபா
3. மனது
4. வானகம்
8. புகழ்
10. அர்க்கிப்(பு)
12. வழிபாடு
13. வல்லமையோடு

**மேலிருந்து கீழ்**

1. படைப்பு
2. பானம்
3. (கா)மம்
5. கணவர்
6. தீக்கி
7. மதிப்பு
10. அலுவல்
11. போலி

### பரிசு பெறுவோர்

**1ம் பரிசு:**

கிறிஸ்டினு பெஸ்டியன்,
தி. கு. க. மடம்,
இராகலை, அல்கரனேயா.

**2ம் பரிசு:**

பத்திநாதன் தேவராஜா,
31/1. லேடி மெனிங் ட்றைவ்,
புளியடிக்குடா, மட்டக்களப்பு.

### பாராட்டுப் பெறுவோர்

1) ப. தேவராஜா
அரசினர் மரவேலைப் பயிற்சிப் பாடசாலை, வாகரை

2) செல்வி. அ. கலிஸ்ரா சுபாஷினி,
B. L. 47 5வது அவெனியு,
அம்பாறை.

3) A. ஜெயநேசன்
243, பாரதிபுரம்,
கனனியா வீதி,
திருகோணமலை.

4) அரசரெட்ணம் ஜுலியற் தயாமலர்
இல. 21, லேக் வீதி - 2,
மட்டக்களப்பு.

5) வஸ்ரியன்பிள்ளை சலுஜா
சொறிக்கல்முனை,
சம்மாந்துறை

பங்குபற்றியோர் — 36

சரியான் விடை அளித்தோர் — 27

—அனைவருக்கும் எமது நன்றி.—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## தெரிந்து கொள்ளுங்கள்!

தொண்டனில் பிரசுரமான தெரிந்து கொள்ளுங்கள் பகுதிமூலம் 'வத்திக்கான் நாடு பற்றிய பல விடயங்களை அறிந்து கொள்ள வாய்ப்பாக இருந்தது. இது போன்று அறிய முடியாத பல விடயங்களை இப்பகுதியில் தொடர்ந்து வழங்கினால் மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்பதை 'தெரிந்து கொள்ளுங்கள்'.

அ. அமலன் தினேஷ்குமார்
அம்பாறை.

## தொடரட்டும்!

ஆனித் தொண்டனில் வெளியான ஓர் அகதியின் பாடல் வெகுஜோர் தொடரட்டும் இது போன்ற சீர்திருத்தக்கவிதைகள்

திரு யூலியன் பயஸ்
நாவலடி, மட்டக்களப்பு.

## சிந்தித்தேன்!

ஆடிமாதத் தொண்டனில் எதிரொலி யில் வெளிவந்த மலர்வேந்தன் அண்ணாவின் அரசியல் கண்ணோட்டம் சிறந்தது மட்டு மல்லாமல் சிந்திக்கவும் வைத்தது.

அ. ஜேசுராஜா
புனிதவளன் இளங்குருமடம்,
மட்டக்களப்பு.

## மன்னிக்க மாட்டேன்!

குறுக்கெழுத்துப் போட்டி 42ல் தவறு செய்துவிட்டீர்கள். இது மன்னிக்க முடியாத ஒன்று.

('மன்னித்தால் மன்னிப்புப் பெறுவோம்' ஆகவே தயவு செய்து மன்னித்து விடுங்கள் இ. ஆ.)

பட்டம் பெற்றாலும் அரசியல் செல்வாக்கு இருந்தால் தான் உத்தியோகம் கிடைக்கும் என்று 'சொந்தம் எப்போதும் தொடர்கதை தான்' கதையின் மூலம் சமூக சூழலைச் சாடியுள்ள செ. கு. அவர்களை பாராட்டத்தான வேண்டும்.

செல்வி. அ. கலிஸ்ரா சுபாஷினி
அம்பாறை.

## பிடித்தது இதுதான்!

ஆடித்தொண்டனில் யோகி எழுதிய ஈன்ற பொழுதில் என்ற சிறுகதையும் 'அக்ரா' சுற்றுலாவும் தான் எங்களுக்குப் பிடித்தது.

A. மேரி றெஜினு
A. வேணி
கோட்டைக் கல்லாறு.

## நன்றி!

கடந்துபோன மாதமெல்லாம் நடுப் பகுதியில் எமக்குக்கிடைத்த தொண்டனை இம் மாதம் முதல் வாரத்தில் அனுப்பியதற்கு நன்றி.

அமலதாஸ் அஞ்சலின்
கோட்டைக் கல்லாறு.

## கவர்ந்த சிறுகதை!

ஆனித் தொண்டனில் வெளிவந்த காலங்கடந்த சிந்தனை என்ற சிறுகதை என்னைக் கவர்ந்து விட்டது. எழுதியவருக்கு எனது மனமார்ந்த நன்றி.

A. கிறிஸ்ரி
கூழாவடி, மட்டக்களப்பு.

## வாயாடியை மறந்ததேன்?

ஆடித்தொண்டனில் அமைந்த அனைத்து ஆக்கங்களும் நன்று. ஆனால் வாயாடி வண்டு மணியை சேர்க்கத் தவறி விட்டீர்கள். அடுத்த இதழிலாவது சேர்த்துக்கொள் வீர்களென எண்ணுகிறேன்.

றெமி
பாலையூற்று. திருகோணமலை.

## மிகவும் சிறப்பு

ஆடித் தொண்டனில் விவிலியமும் வாழ்வும் என்ற கட்டுரையும், ஈன்ற பொழுதில் என்ற சிறு கதையும் மிகவும் சிறப்பாக இருந்தன பாராட்டுகள்

M. அன்ரன்
பாலையூற்று. திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA.

## எழுத்தாளர்களுக்கு ஓர் இனிய செய்தி!

# சிறுகதைப் பயிற்சி அரங்கு

* சிறுகதை என்றால் என்ன?
* சிறுகதை எழுதுவது எப்படி?
* சிறந்த சிறுகதை எழுத்தாளராக ஓர் அரிய வாய்ப்பு.
* அநுபவம் மிக்க எழுத்தாளர்கள் நடத்துகிறார்கள்
* நாள் 22 - 08 - 87.

நேரம்: காலை 8-30 முதல் மாலை 4-30 வரை

## அநுமதி இலவசம்

குறிப்பிட்ட எண்ணிக்கையினரே அநுமதிக்கப்படுவர்

ஆகவே முந்துங்கள்

இச்சஞ்சிகை, மட்டக்களப்பு புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 25 - 07 - 87ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media